Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 077 | வியாழக்கிழமை | தை 29 ஆம் நாள் 11 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## வடக்கில் நேற்று 21 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், பெப். 11
யாழ்ப்பாணம் மருத்துவபீடம், யாழ்ப்பாணம் போதனா மருத்து 18



# குருந்தூரில் மீட்கப்பட்டது சிவலிங்கம் இல்லையாம்!

### சொல்கிறது தொல்பொருள் திணைக்களம்

முல்லைத்தீவு, பெப்ரவரி 11

முல்லைத்தீவு குருந்தூர்மலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகளின்போது நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சிவலிங்கம் இல்லை. அது ஆதிகால விகாரையின் தூண் என்று தெரிவித்தது தொல்பொருள் திணைக்களம். 19

## குருந்தூர் மலையில் பல்லவர்கால சிவலிங்கம்

### நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார் சாள்ஸ் எம்.பி

முல்லைத்தீவு, பெப். 11
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சியில் இன்று (நேற்று) பல்லவர்காலத்து சிவலிங்கமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று 19

## பொலிஸ் உத்தியோகத்தர் தவறான முடிவெடுத்து சாவு

கொடிகாமம், பெப். 11
பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். மீசாலை மேற்கைச் சேர்ந்த 30 வயதுடைய கிருஷ்ணானந்தன் இராகு 18

## கொரோனா சாவு 375!

கொழும்பு, பெப். 11
இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 375ஆக அதிகரித்துள்ளது. இறுதியாக 5 19




## 'பொ-பொ மக்கள் இயக்கம்' நேற்று ஆரம்பித்து வைப்பு!

யாழ்ப்பாணம், பெப். 11
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. போராட்டத்தை முன்னின்று வழிப்படுத்திய வர்களில் ஒருவரான வேலன் சுவாமிகள் இந்த அமைப்பினை அங்குரார்ப்பணம் 18




## 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' வரை மக்களின் பேரெழுச்சியே பெருவெற்றிக்கு காரணம்

### தமிழ் முஸ்லிம் உறவில் மீண்டும் புத்துயிர்ப்பு என்கிறார் வேலன் சுவாமி

யாழ்ப்பாணம், பெப். 11
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தை ஒழுங்கமைக்கும்போது 50 பேர் வரையில் பங்கேற்பதே பெரிய விடயமாக இருந்தது. ஆனால், மக்களின் தன்னெழுச்சியால்தான் பேரணி இவ்வாறு பெருவெற்றி பெற்றது - என்று தெரிவித்தார் 19

## ஜனாஸாக்களை அடக்கம் செய்யலாம்!

### அரசு அனுமதி

கொழும்பு, பெப். 11
கொரோனாப் பெருந்தொற்றால் உயிரிழப்போரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்றுத் 19

## இந்தியா - இலங்கையிடையே மீண்டும் விமான சேவைகள்!

கொழும்பு, பெப். 11
கடுமையான சுகாதார வழிகாட்டுதலின் கீழ் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவ 19

## உடுவில் - மல்வம் பகுதியில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!

### முறையிட்டும் கண்டுகொள்ளாத பொலிஸ்

யாழ்ப்பாணம், பெப். 11
உடுவில் மல்வம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் குழு அங்குள்ள உடைமைகளை அடித்து நொருக்கிச் சேதாரமாக்கிவிட்டுத் தப்பிச் 19

## சரத் வீரசேகரவுக்கு எதிராகவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கு!!!

### தாக்கல் செய்யவேண்டும் என்கிறார் சட்டத்தரணி சுகாஷ்

யாழ்ப்பாணம், பெப். 11
நீதித்துறை எந்தவொரு அழுத்தங்களும் இல்லாமல் சுதந்திரமாகச் செயற்படவேண்டும். ஆனால் நீதித்துறைக்கு அழுத்தத்தைக் கொடுக்கின்ற வகையில், நீதித் துறையை தானே இயக்குவது போல சரத் வீரசேகர கருத்துத் தெரிவித்திருப்பது இலங்கையினுடைய 19

## தேசிய சக்திகளை பிளவுபடுத்தச் சதி!

### பதறுகிறார் எல்லே குணவங்ச தேரர்

கொழும்பு, பெப். 11
சர்வதேச உளவுப்பிரிவுகள் நாட்டுக்குள் செயற்படுகின்றன என்றும், தேசிய சக்திகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்றும் தேசத்தை பாதுகாக் 19

# அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவருமில்லை

*நாடாளுமன்றிலும் மஹிந்த பழையபல்லவி*

**கொழும்பு, பெப். 11**

**சிறைகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றில் நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். நாட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றில் நேற்றுக் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இதேவேளை, பிரதமர் சார்பாக கேள்விக்குப் பதிலளித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் 12 ஆயிரத்து 843 பேர் அரசிடம் சரணடைந்தனர். அவர்களும் 600 சிறுவர் போராளிகளும் அரசினால் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

பிரதமர் தெரிவித்ததன் அடிப்படையில், இலங்கையில் எந்த அரசியல் கைதிகளும் இல்லை. ஆயினும் சிறைகளில் உள்ளவர்கள் மீது வழக்குகள் நிலுவையில் இருக்கின்றமையால் ஏராளமானோர் தடுப்புக் காவலில் இருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின் அடிப்படையில், அவர்களின் வழக்குகளை எவ்வாறு விரைவுபடுத்தலாம் என்பதை அறிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர், சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோரை தான் சந்தித்தேன் என்றும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

அரசு அவர்களை வேண்டுமென்றே தடுப்புக்காவலில் வைக்கவில்லை என்றும், அவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் தெரிவித்த நீதி அமைச்சர், ஆகவே அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தனித்தனியாக விசாரிக்குமாறு சட்டமா அதிபரிடம் வினவப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

(த-இ)

*ஜனாதிபதி ஆணைக்குழுவின்*

## பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யும் ரிட் மனுவை ஆராய நீதிமன்று தீர்மானம்

கொழும்பு, பெப். 11

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட பரிந்துரைகளை, வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவொன்றை பரிசீலனைசெய்ய மேன்முறையீட்டு நீதிமன்று தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்ன கொரயா ஆகிய நீதிபதிகள் குழாம் குறித்த மனுவை ஆராய்ந்து அதைப் பரிசீலனைசெய்யத் தீர்மானித்துள்ளது.

குறித்த மனுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தாக்கல் செய்தார்.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அதன் தலைவர், பணிப்பாளர் சபை, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரான உயர்நீதிமன்றின் ஓய்வு பெற்ற நீதிபதி உபாலி அபேரத்ன, குறித்த ஆணைக்குழுவின் உறுப்பினரான தயா சந்திரசிறி ஜயதிலக, அதன் உறுப்பினரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமான சந்திரா பெர்னான்டோ, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உள்ளிட்ட 14 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட பரிந்துரைகளில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலர் மீது நடவடிக்கையெடுப்பது பற்றிய பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க குழுவொன்றை அமைக்கும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(த-இ)

## புலி பற்றி சபையில் பேசினால் கடும் தண்டனை விதிக்க சட்டம்

*சண்டித்தனம் காட்டுகிறார் அமைச்சர் சரத் வீரசேகர*

கொழும்பு, பெப். 11

இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், அந்த அமைப்புத் தொடர்பாகவோ அல்லது அதன் தலைவர் தொடர்பாகவோ நாடாளுமன்றில் பேசும் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான தண்டனையை விதிக்கும் வகையில் சட்டமொன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும் அதன் தலைவர் குறித்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபைக்குள் புகழாரம் சூட்டும் வகையில் பேசுகின்றனர் என்று தெரிவிக்கப்படும் நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஜேர்மன் நாடாளுமன்றில் ஹிட்லர் தொடர்பில் கருத்துரைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை இதற்குச் சிறந்த உதாரணம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொலைசெய்த பிரபாகரன் மற்றும் அவர் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்து, உயரிய பீடமான நாடாளுமன்றில் சிலர் புகழாரம் சூட்டும் வகையில் கருத்து வெளியிடுகின்றமை கவலைக்குரிய விடயம் என்றும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

(த-இ)

## வடக்கு கிழக்கில் 97 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுவிட்டனவாம்!

கொழும்பு, பெப். 11

போரின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 97 வீதமான நிலங்கள் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் மற்றும் அரச காணிகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, 100 இல் 3 வீதமான காணிகள் தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக அரசினால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த விடயம் உளவுத்துறை ஆதாரங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

எனினும், மீதமுள்ள 97 வீதமான நிலங்கள் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

(த-இ)

## சிறுவனின் சடலம் மீட்பு நண்பனுக்கு மறியல்

வவுனியா, பெப். 11

வுனியா ஓமந்தை நவ்வி பகுதியில் கிணற்றிலிருந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்ட நிலையில், சிறுவனின் நன்பனான 10வயதுச் சிறுவன் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுவனை 10 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுவனின் உடல்கூறுகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன என்றும் ஓமந்தை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த ப.அபிசக் (வயது - 7) என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டார். கடந்த திங்கட்கிழமை நண்பனின் வீட்டுக்குச் சென்று விளையாடிக்கொண்டிருந்த போது நண்பனின் வீட்டுக்கு முன்பாகவுள்ள கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்திருந்தது.

நேற்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-10)

## 'மெதுவான பணி' போராட்டத்தில் குதித்தனர் ரயில் பொறுப்பதிகாரிகள்

கொழும்பு, பெப். 11

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினதர், நேற்று நள்ளிரவு தொடக்கம் மெதுவாகப் பணிபுரியும் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாத தமது பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு வழங்குமாறு கோரியே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

போராட்டம் காரணமாக ரயில் சேவை இரத்து அல்லது தாமதம் ஏற்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

(த-இ)

## யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி உட்பட 12 பேர் மேல்நீதிமன்ற நீதிபதிகளாகினர்

கொழும்பு, பெப். 11

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன் மற்றும் ஜெயராமன் ரொக்ஸி ஆகிய தமிழ் பேசும் நீதிபதிகள் இருவர் உட்பட 12 பேர் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நேற்றுப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் அவர்கள் நேற்று உறுதியுரை எடுத்துப் பதவியேற்றனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

11 மாவட்ட நீதிபதிகளுக்கும் மூத்த அரச சட்டவாதி ஒருவருக்கும் என 12 பேருக்கே மேல் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி நீதிச் சேவையில் இணைந்து கொண்ட மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன், 2018ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாகக் கடமையேற்றார்.

2018ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி நீதிச் சேவை அலுவலகர் சிறப்புத் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றார்.

அவ்வாறே நீதிபதி ஜெயராமன் ரொக்ஸியும் மேல்நீதிமன்ற நீதிபதியாக பதவியுயர்வுபெற்றுள்ளார்.

இவர்கள் தவிர, எம்.எம்.எம். மிகால், செல்வி என்.கே.டி கே.ஐ.நாணயக்கார, ஆர்.எல். கொடவெல, யு.ஆர். வி.பி. ரனதுங்க, செல்வி எஸ்.எச்.எம்.என் லக்மாலி, டி.ஜி.என்.ஆர் பிரேமரத்ன, செல்வி டபிள்யூ.டி. விமல சிறி, மஹி விஜேவீர, ஐ.பி.டி. லியனகே, ஆகிய நீதிபதிகளும் சிரேஷ்ட அரச வழக்குரைஞரான திருமதி என்.ஏ. சுவந்துருகொட ஆகியோரே மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் பெற்ற ஏனையவர்களாவர். (த-இ)

# தமிழருக்கு உரிமையும் இல்லை எந்த அபிவிருத்திகளும் இல்லை



## சாணக்கியன் எம்.பி கவலை

மட்டக்களப்பு, பெப்.11

எமது மக்களுக்கான உரிமையும் இல்லை, அபிவிருத்தியும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நவகிரி என்ற செயற்றிட்டத்தில் அவசர வான்கதவு என்பதொன்று காணப்படுகிறது. 2010ஆம் ஆண்டிலிருந்து அவசர வான்கதவு என்பது எமக்குக் கிடையாது. இவ்வாறான நிலையில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது குளத்தை அண்மித்த பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்படும். 2010ஆம் ஆண்டிலிருந்து பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் இதுவரையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அத்துடன் மட்டக்களப்பு முகத்துவாரத்தை அண்மித்த ஆறுகளையும் மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். ஆழம் குறைந்திருப்பதே இதற்கான காரணம் ஆகும். குறைந்த அளவு மழை பெய்தாலும் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வருடமும் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் எமது மக்களுக்கான வெள்ள நிவாரண நிதி ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்பட வேண்டும்.

ரூகம் செயற்றிட்டத்துக்கான போதியளவு கடன் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெறாததன் காரணமாக இச்செயற்திட்டத்தை இடைநிறுத்துவதாக குறிப்பிடப்படுகிறது.

உண்மையாகவே இந்தத் திட்டம் கைவிடப்படக் கூடாது. இத் திட்டமானது எம் மக்களுக்கான ஓர் அத்தியாவசிய தேவை ஆகும். இந்தத் திட்டமானது சரியான முறையில் செய்யப்படுமிடத்து 15,000 தொடக்கம் 20,000 ஏக்கர் அளவில் வருடத்தில் இரண்டு முறை விவசாயம் மேற்கொள்ள முடியும். மீன்பிடித் துறையையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

எங்களுடைய உரிமை சார்ந்த கவனவீர்ப்புப் போராட்டமான பொத்துவில் முதல் பொலிகண்டி போராட்டத்துக்கு கண்டனம் தெரிவிக்கப்படுகின்றதே தவிர, எமது மக்களுக்குப் பயனுள்ள பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் கட்டமைக்கும் இவ்வாறான சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. எமது மக்களுக்கு உரிமையும் இல்லை; அபிவிருத்தியும் இல்லை -என்றார். (ப)

# காதி நீதிமன்றங்கள் தொடர்பில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்

## அத்துரலிய ரத்தன தேரர் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.11

ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற கொள்கையில் பயணிக்கும் இலங்கையில், காதி நீதிமன்றங்கள் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'ஒரு நாடு ஒரு சட்டம் என்பதுதான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதன்மைக் கொள்கையாகக் காணப்படுகிறது. அரசமைப்பிலும் ஒரு நாட்டில் ஒரு சட்டம் என்றுதான் கூறப்படுகிறது. இந்த நிலையில், இலங்கையில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு திருமணச் சட்டம் காணப்படுகிறது. பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளிலேயே இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், இலங்கையில் மட்டும் அச்சட்டம் வழக்கிலுள்ளது. அத்துடன் முஸ்லிம் மக்களுக்கு என இந்த நாட்டில் காதி நீதிமன்றங்களும் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்தால், அவரை கட்டாயமாக முஸ்லிமாக மாற்ற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. விவகாரத்து செய்வதாக இருந்தாலும், சாதாரண நீதிமன்றங்களில் மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது. என்றார். (ஐ-இ)

# பாகிஸ்தான் பிரதித் தூதுவருடன் ரிஷாத் அணி சந்திப்பு

கொழும்பு, பெப். 11

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுடன் சந்திப்புக்கு ஒழுங்கு செய்து தருமாறு கோரி, இலங்கைக்கான பாகிஸ்தானின் பிரதித் தூதுவருடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடத்தியுள்ளனர்.

சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பில் பிரதமர் இம்ரான் கான், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். 'உலக சுகாதார நிறுவனத்தின் சுகாதார வழிகாட்டலுக்கு அமைய, உலகத்தின் 190 நாடுகள் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்கின்றன. இலங்கையில் மாத்திரம் கடும்போக்குக் கொள்கையுடன் ஜனாஸாக்களைப் பலவந்தமாக எரிக்கின்றனர். இது தொடர்பில், எமக்கு நியாயம் பெற்றுத்தர பிரதமரது வருகை உதவ வேண்டும்' என்று இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட கட்சியின் தவிசாளர் அமீர் அலி குறிப்பிட்டார். (ஒ.இ)

## இராணுவத்தைக் கொன்றேன்:

# கருணா அம்மானுக்கு எதிரான வழக்கு மீளப்பெறப்பட்டது

கொழும்பு, பெப். 11

ஆனையிறவில் ஒரே இரவில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொலை செய்தோம் என்று கருணா அம்மான் தெரிவித்த கருத்துத் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கடுவல நகரசபை உறுப்பினரொருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புக்கு அமைவாக இந்தக் கருத்துத் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனுதாரின் சட்டத்தரணி மன்றில் கூறினார். இதனால் மனுவைத் தொடரத் தேவையில்லை. அதனை மீளப் பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறும் நீதியரசர்களிடம் அவர் விண்ணப்பம் செய்தார். அதனை ஏற்றுக் கொண்டு வழக்கை நீதியரசர்கள் தள்ளுபடி செய்தனர். (ஒ.இ)

# 'எங்களுக்குத் தொடர்பில்லை'

## இராஜாங்க அமைச்சர் பதில்

கொழும்பு, பெப். 11

வடக்கில் கடல் தாண்டிய தீவுகளில் கடமையாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார துறையினர் ஆகியோருக்கான விசேட கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பில் வடக்கு மாகாண சபையே தீர்மானிக்க வேண்டுமென்று, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல வினாக்கள் நேரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் நேற்றுமுன்தினம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஒ.இ)

# மன்னாரில் காணாமல்போன மீனவர்கள் 10 நாள்கள் கடந்தும் வீடு திரும்பவில்லை

## பிரஜைகள் குழுவிடம் உதவி கோரினர் குடும்பத்தினர்

மன்னார், பெப்.11

மன்னாரில் மீன் பிடிக்கச் சென்று கடலில் காணாமல்போன மூன்று மீனவர்கள் பத்து நாள்கள் கடந்தும் வீடு திரும்பாத நிலையில், அது தொடர்பில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் உதவியை நாடிய அவர்களின் குடும்பத்தினர் மீனவர்களைக் கண்டு பிடிப்பதற் கான உதவியைக் கோரியுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொண்ணையான் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த கண்ணன் (வயது - 53), பாண்டியன் (வயது -23) செபஸ்ரியான் கொட்வின் (வயது - 31) ஆகிய மூன்று மீனவர்கள் கடந்த 30ஆம் திகதி ஒரு படகில் வழமைபோன்று தூண்டில் மூலம் மீன்பிடிக்க ஓலைத்தொடுவாய் துறை முகத்திலிருந்து புறப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்கள் தங்களின் படகில் எரிபொருள் தீர்ந்து விட்டது என்றும், கடலில் நங்கூரம் இட்டும் பலனளிக்காத நிலையில் தாங்கள் கடலில் படகுடன் இழுபட்டுச் செல்கிறோம் என்றும் மறுநாள் தங்கள் உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்துள்ளனர். உறவினர்கள் இது தொடர்பாக மன்னார் கடற்றொழில் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர்களிடம் முறைப்பாடு செய்தனர். மீனவர்களை மீட்பதற்கான உதவிகளை கடற்படையினரிடம் கோரினர். எனினும் மீனவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்கள் காணாமல் போய் பத்துத் தினங்கள் கடந்த நிலையிலேயே உறவினர்கள் தற்போது மன்னார் பிரஜைகள் குழுவிடம் உதவிகோரியுள்ளனர். (ப-60)

# 120 ஏக்கர் வயல் நிலத்தில் விவசாயம் செய்வதற்கு தடை

## துவரங்குளம் மக்கள் அவதி

**முல்லைத்தீவு, பெப்.11**

**மீள் குடியேற்றத்தின் பின்னர் கடந்த 2012 ஆம் ஆண்டு துவரங்குளம் சீரமைப்புச் செய்யப்பட்டு, அதன் கீழ் உள்ள 120 ஏக்கர் வயல் நிலம் வன்னிவிளாங்குளத்தைச் சேர்ந்த 58 குடும்பங்களுக்கு கடந்த 2014ஆம் ஆண்டில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டதாக வன்னிவிளாங்குள விவசாயிகள் தெரிவித்தனர். இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:**

வயல் காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன. மக்கள் வயல் நிலங்களைத் துப்பரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த இராணுவத்தினர் அந்த வயல் காணிகளில் கண்ணிவெடிகள் உள்ளன என்றும், அவற்றை அகற்றும்வரை எவரும் வயல் காணிகளுக்குள் பிரவேசிக்க வேண்டாமெனவும் அறிவுறுத்தினர். கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வந்த வனவளத் திணைக்கள அதிகாரிகள் அந்த வயல்காணிகள் வனவளத்திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்டது. எனவே அதில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதெனத் தடுத்தனர். வயல் நிலங்களில் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் வனவளத் திணைக்களத்துடன் பேசி சாதகமான பதில் பெற்றுத்தரப்படும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. எனினும் தற்போதைய அரசு ஆட்சி அமைத்ததைத் தொடர்ந்து நடைபெற்று வந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் குறித்த வயற் காணி வனவளத்திணைக்களத்தின் கீழ் உள்ளது; அதனை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்த முடியாதென முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் போன்றவற்றின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எமக்கு வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியற்றவை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பலநூறு வருடங்கள் வரலாற்றைக் கொண்ட துவரங் குளத்தின் கீழ் எமது மூதாதையர்களின் காலத்திலிருந்தே நாம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். கடந்த போர்க் காலத்தின்போது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடாததால் மரங்கள் வளர்ந்து காடாகிய நிலையில், இதைக் காரணங்காட்டியே வனவளத்திணைக்களத்தினர் அது தங்களது பாதுகாப்புக்கு உட்பட்ட நிலமெனகூறி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் எல்லைக் கற்களை நட்டுள்ளனர். விவசாயம் செய்வதற்கு நிலங்களற்றிருக்கும் எமது கிராமத்திலுள்ள 58 குடும்பங்களுக்கும் அனுமதிப்பத்திரத்துடன் வழங்கப்பட்ட துவரங்குளம் நீர்பாசனத்தின் கீழான வயல் காணியில் விவசாயம் செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுமதிக்க வேண்டும் - என்றனர். (ப-12)



# சிறுத்தைகளால் மாடுகள் அழிவு

### கிளிநொச்சியில் பண்ணையாளர்கள் கவலை

கிளிநொச்சி, பெப்.11

கிளிநொச்சி அக்கராயன் நான்காம் கட்டைப் பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்படுகின்ற மாடுகள் சிறுத்தைகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன என்று பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; கிளிநொச்சி, மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இன்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் தங்களின் மாடுகளை அக்கராயன் முறிகண்டி வீதியில் நான்காம் கட்டைக் காட்டுப் பகுதியில் மேச்சலுக்காக விடுகின்றனர். இதன் போது அவை சிறுத்தைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றன. குறிப்பாக மாட்டுக் கன்றுகள் சிறுத்தைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி இறக்கின்றன.

பண்ணையாளர் ஒருவருக்குச் சொந்தமான நான்கு மாடுகள் சிறுத்தைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி கடந்த சில மாதங்களுக்குள் இறந்திருக்கின்றன. இத்தகைய சிரமங்களை நாம் தொடர்ச்சியாக எதிர்கொள்கின்றோம். மேய்ச்சல் தரவை இன்மையே இதற்கு பிரதான காரணமாகும். எனவே சம் பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர். (ப-214)

# கலாசார அலுவலர்கள் இடமாற்றம்

பளை, பெப். 11

பளைப் பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி இ.மேகலைச்செல்வி துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்துக்கு துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய சிவ. முகுந்தன் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ப-9)

# வவுனியா தெற்கு வலயத்தில்

## 3 பாடசாலைகளின் தரம் உயரும்

வவுனியா, பெப். 11

ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் தேசிய வேலைத் திட்டத்துக்கு வவுனியா தெற்கு கல்வி வலயத்திலிருந்து 3 பாடசாலைகள் முன்மொழியப்பட்டுள்ளன. செட்டிக்குளம் மகா வித்தியாலயம், அல் ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம், பரக்கும்ப மகா வித்தியாலயம் ஆகியனவே முன்மொழியப்பட்டுள்ளன. மாகாணப் பாடசாலைகளை மத்திய அரசின் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரும் இந்தச் செயற்பாடு, மாகாணத்துக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களைப் பறிக்கும் நடவடிக்கை என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் குற்றம் சுமத்தி வடக்கு ஆளுநருக்கு கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,18)





மாங்குளத்தில் அமைந்துள்ள நல்லாயன் சிறுவர் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட சம்மேளன உபதலைவர் தனுசியாவின் தலைமையில் 2021ஆம் ஆண்டுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. (ய-159)

# கிளிநொச்சியில் இயற்கை முறையில் பயிரிடப்பட்ட நெல் அறுவடை

மன்னார், பெப்.11

கிளிநொச்சியில் இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தால் இயற்கை முறை விவசாயம் மற்றும் பாரம்பரிய விதை தானியங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் நெற்செய்கை அறிமுகம் செய்யப்பட்டது.

அதற்கு அமைவாக கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட கரியாலை நாகபடுவான் பகுதியில் அந்த நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பெண்கள் சிறு குழுக்கள் ஊடாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



அழிவடைந்துவரும் மற்றும் அப்பிரதேசத்துக்கு ஏற்றதான "பச்சைப்பெருமாள்" எனும் நெல்லினம் குறித்த குழுவினரால் 5 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது.

அதன் விளைச்சலே இவ்வாறு அறுவடை செய்யப்பட்டது. இதன் போது அறுவடை செய்யப்பட்ட நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசியில் பொங்கல் நிகழ்வும் இடம்பெற்றது. (ப-214)

## சிக்காமல் தப்புவார்களா?

அரசன் ஒருவன் சாகும் தறுவாயில் தன் மகனை அழைத்தான்.

“மகனே, உன்னை எல்லோரும் நல்லமன்னன் என்று புகழும்படி ஆட்சி செய்யவேண்டும்” என உறுதிமொழி வாங்கிவிட்டு உயிர் நீத்தான். மகனும் முடிசூடினான். அவன் ஆட்சியில் அமர்ந்ததும் செய்த முதல் வேலை, புதிதாகப் பல வரிகளை விதித்ததுதான். திறைசேரி நிறை யத் தொடங்கியது. மக்கள் செய்யும் விவசாயம் போன்ற சகல உற்பத்திகளும் அரசனுக்கே சொந்தமென்று கட்டளையிட்டான். பொன்னும், பொருளும், தானியங்களும் அரச களஞ்சியத்தில் மிகையாகக் குவிந்தன.

தம் மீது ஏராளமான வரிகளை விதித்து தங்களை வதைக்கும் மன்னனை மக்கள் தூற்றத் தொடங்கினர். ”இந்த ஆட்சியில் வாழ்வதை விட சாவது மேல்’ என்று மக்கள் சொல்லுமளவுக்கு அவன் ஆட்சியில் மக்கள் துயரத்தையே அனுபவித்தனர். காலங்கள் உருண்டோடின. அவன் முதிய வயதை அண்மித்தான். திடீரென அதுவரை தான் போட்ட வரிகளை விலக்கினான். மக்கள் உற்பத்தி செய்யும் எல்லாம் மக்களுக்கே என்று அறிவித்தான். மக்கள் ஆனந்தக் கூத்தாடினர். “ இவனல்லவோ மன்னன்” என்று அவன் சாகும் வரை புகழ்ந்து பாடினர்.

இந்தக் கதையில் எந்த மன்னன் வரிகளை விதித்து துன்பப்படுத்தினானோ, அவன் நீண்டகாலத்துக்கு பிறகு அதே வரிகளைத் தளர்த்தியதன் மூலம் அத்தனை நாளும் செய்த அக்கிரமங்களை மறக்கடித்து, தன்னை நல்லவன் என்று சொல்ல வைத்திருந்தான். அதேபோன்றுதான் இப்போதைய இலங்கை ஆட்சியாளர்களும் தாங்களே சில சட்டங்களைப் போட்டு, மக்களை இன்னலுக்குள் தள்ளிவிட்டு, பின்னர் தாங்களே அதை விலக்கிக் கொண்டு நல்ல பேர் வாங்க நினைக்கின்றனர். இதற்கு ஆகப்பிந்திய உதாரணம்,முஸ்லிம் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் ஜனாஸா எரிப்பு விவகாரம்.


முஸ்லிம் ஒருவர் கொரோனாவால் பீடிக்கப்பட்டு, உயிரிழந்தால் இஸ்லாமிய முறைப்படி நிலத்தில் அடக்கம் செய்யாமல், அவரின் ஜனாஸாவை ( சடலத்தை) உட னேயே எரிக்கும் நடைமுறையை இலங்கை அரசாங்கம் கைக்கொண்டது.இது முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல் எனக் கூறி முஸ்லிம்கள் ‘கபன் துணி’ (ஜனாஸாக்களில் போர்த்தப்படும் துணி) கட்டி அரசாங்கத்தின் செயலுக்கு பரவலாக எதிர்ப்புகள் வெளியிட்டனர். முஸ்லிம் அரசியல்வாதிகளும் தங்கள் இனத்தின் உரிமை மறுதலிக்கப்பட்டமைக்காகக் கொதித்தெழுந்தனர். அவ்வளவு ஏன், இலங்கையின் நீதியமைச்ச ரான அலி சப்ரி கூட, தங்கள் இனத்துக்கு நீதி மறுக்கப்பட்டதாக வேதனைப்படுமளவுக்கு நிலைமை கைமீறிப்போனது. ஆனால் என்னதான் எதிர்ப்புக்குரல்கள் எழுந்த போதும் அரசாங்கம் அசரவில்லை.

“ஜனாஸாக்களை புதைப்பது சுகாதார நடைமுறைக்கு ஒவ்வாதது. நிலத்தடி நீரோடி கொரோனா கலந்து ஆபத்தை உண்டுபண்ணிவிடும்” என ஒரு சாட்டும் சொல்லப்பட்டது. ஆனானப்பட்ட அமெரிக்காவிலேயே கூட சடலங்கள் புதைக்கப்படுகையில், இலங்கையில் மட்டும் சடலங்களைப் புதைத்தால் கொரோனா பரவும் என்று சின்னப்பிள்ளைத்தனமாக சாட்டுச் சொல்லப்பட்டது.

முஸ்லிம்கள் மத்தியில் ராஜபக்சக்கள் மீதான வெறுப்பு நிலை உச்சத்தை தொட்டது.அதனாலேயே ‘பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான’ பேரணிக்கு கூட, முஸ்லிம் கட்சிகளும், மக்களும் பெருமளவில் ஆதரவளிக்குமளவுக்கு அரசுக்கு எதிரான மனோநிலை விஸ்வரூபமெடுத்திருந்தது. இந்தநிலையில், எந்த ராஜபக்சக்கள் ஜனாஸாவை புதைக்கக் கூடாது என்று சட்டமிட்டார்களோ, அவர்களே இப்போது புதைக்கவோ , எரிக்கவோ தடையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இனி, “ஜனாஸாக்களை புதைக்க அனுமதி தந்தவர்களே வாழ்க” என்ற கோஷத்தோடு , தமக்கு ஆதரவாக முஸ்லிம்கள் காவடி தூக்கவும் கூடும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

“அவரே வைப்பாராம், அவரே எடுப்பாராம்” என்று முதல்வன் படத்தில் ரகுவரன் சொல்வதைப்போல, செயற்கையாக கஷ்டங்களை,தடைகளை உருவாக்கி விட்டு அவற்றை அவர்களே நீக்கி , மக்களிடத்தே தங்கள் செல்வாக்கை உயர்த்தும் ராஜபக்சக்களின் தந்திரத்துக்கு இம்முறையாவது முஸ்லிம் மக்கள் சிக்காமல் இருக்கவேண்டும். இருப்பார்களா?

### இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிகல

# முல்லை. வட்டுவாகல் பாலத்தில் மின் விளக்குகளை பொருத்துக

## மீனவர்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, பெப்.11**

**வட்டுவாகல் பாலத்தில் வெளிச்சம் இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதோடு, மீனவர்களும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் பாலத்தில் மின் விளக்குகளைப் பொருத்தித் தரவேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தில் மீனவர்கள் தற்போது இறால் பிடியில் ஈடுபட்டுள்ளார்கள். இரவு நேரங்களில் அதிகளவான மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் வெளிச்சம் இல்லாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வட்டுவாகல் பாலம் ஊடாகப் பயணிக்கும் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. பாலத்துக்கு இடைப்பட்ட பகுதியில் 7 மின்கம்பங்கள் காணப்படுகின்றன. ஒன்றில் கூட மின் விளக்குப் பொருத்தப்படவில்லை. இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். வட்டுவாகல் பாலத்தின் அருகில் இருந்தே இறால் பிடி நடவடிக்கையில் ஈடுபடுகிறோம். வட்டுவாகல் பாலம் சீரமைக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்திருந்த போதும் அது நடைபெறவில்லை.

இந்த நிலையில் தற்போது இறால் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் நாளாந்தம் நூற்றுக்கணக்கான மீனவர்கள் இறால் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். மீனவர்களின் வாழ்வாதார நிலையைக் கருத்தில் எடுத்து பாலத்தில் மின் விளக்குகளைப் பொருத்த நவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

(ப-19)

## கசிப்பு உற்பத்தி; சந்தேகநபர் கைது

நெல்லியடி,பெப்.11

துன்னாலை வேம்படிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கசிப்பு உற்பத்தி செய்த வீடு முற்றுகையிடப்பட்டது.

இதன் போது 15 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு எதிராக பருத்திருத்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-25)

## கண்டிக்கு களப்பயணம்

யாழ்ப்பாணம்.பெப்.11

கண்டி குண்டகசாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திண்மக்கழிவுகளை சேதனப்பசளையாக மாற்றும் செயற்றிட்டத்தைப் பார்வையிட, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் களப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். இந்தக் களப்பயணம் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறும். களப்பயணத்தில் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள், விடயம் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணையவுள்ளனர்.

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள திண்மக் கழிவுகளை, சேதனப் பசளையாக்கும் செயற்றிட்டத்தில் இணைந்துள்ள 8 உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளே இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (க-9)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இரகசியமாக வைக்கப்பட்டது வேட்டு

எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு !



கொழும்பு,பெப்.11

**மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவை வழங்கிவிட்டு, அவர்களுக்கான தொழில் உரிமைகள் மற்றும் சலுகைகளை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்தமுறை கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 750 ரூபா சம்பளம் வழங்கப்பட்டது. அத்துடன், 300 நாள்கள் வேலையும் வழங்கப்பட்டது. இதன்படி வருடமொன்றுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை தொழிலாளர்களால் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் தற்போது அடிப்படை நாள் சம்பளமாக 900 ரூபாவும் இதர கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணயசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் பின்னணியிலுள்ள சூழ்ச்சித் திட்டத்தை புரிந்துகொள்ளவேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதமொன்றுக்கு 13 நாள்களே வேலை வழங்கப்படும். வருடமொன்றுக்கு 156 நாள்களே தொழில் வழங்கப்படும். வருடமொன்றுக்கு ஒரு லட்சத்து 56 ஆயிரத்தை மட்டுமே அவர்களால் உழைக்க முடியும். இதனால் முன்பு எடுத்த வருடாந்த சம்பளத் தொகையில் இருந்து 69 ஆயிரத்தை இழக்கவேண்டிய நிலை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படும். இதனை அனுமதிக்க முடியாது- என்றார். (ஐ-44)

## உலர்ந்த பாக்கு கொள்கலன்கள் சட்டவிரோதமாக மீள் ஏற்றுமதி

கொழும்பு, பெப்.11

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலர்ந்த பாக்குகள் அடங்கிய கொள்கலன்களை போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யும் வர்த்தகம் தொடர்பான தகவல் குற்றப்புல னாய்வு பிரிவினால் கண்டறியப்பட் டுள்ளது.

அவிசாவளை பகுதியை சேர்ந்த 39 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இது தொடர்பான தகவல்கள் தெரியவந்துள்ளன.

சந்தேகநபர் உரிய நடைமுறையை மீறி வரி செலுத்தாமல் 23 கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சந்தேகநபரை நேற்றைய தினம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பின்னர் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, பெப்.11

பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் இந்த எண்ணிக்கை தொடர்பில் அறிவிக்கப்படும் எனவும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி, தீர்மானம் எட்டப்படும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இதன்படி மருத்துவம், பொறியியல் மற்றும் முகாமைத்துவம் உள்ளிட்ட அனைத்து பீடங்களுக்கும் மாணவர்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## இந்த வருடம் சுற்றுலாத்துறை மூலம் அதிக வருமானம் பெற நடவடிக்கை

*பஸில் ராஜபக்ச தெரிவிப்பு*



கொழும்பு,பெப்.11

சுற்றுலாத் துறையின் மூலம் இந்த வருடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டத் திட்டமிட்டு செயற்படுங்கள் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச, சுற்றுலாத் துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுற்றுலாத்துறையில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றுப் பரவலைத் தொடர்ந்து, வீழ்ச்சியடைந்த சுற்றுலாத் துறையை மீண்டும் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார். (ஐ-இ)

## பஹ்ரைன் விமான சேவை இலங்கையில் மீள ஆரம்பம்

கொழும்பு, பெப்.11

பஹ்ரைன் நாட்டின் தேசிய விமான சேவையான 'கல்ஃப் எயார்' விமான சேவை கொரோனா காரணமாக இடைநிறுத்தப்பட்ட நிலையில் தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து மீண்டும் நேரடி சேவைகளைத் தொடங்கவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் வாராந்தம் இரண்டு விமானங்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம் என அந்தச் சேவை நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-இ)

## இன்றைய நாள்



**மேடம்:** பேச்சுத் திறனால் எல்லா இடத்திலும் நல்ல பெயர் எடுப்பீர்கள். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி ஏற்படும். செல்வம் சேரும். வெற்றி காரணமாக உற்சாகமும், நிம்மதியும் வரும்.

**இடபம்:** பழைய பிரச்னைகளைத் தீர்த்து நிம்மதி அடைவீர்கள். பக்குவமாக நடந்து கொள்வீர்கள். வெற்றி பெறும் திறன் வரும். பொறுமையைக் கட்டாயம் கைக்கொள்ள வேண்டும்.

**மிதுனம்:** பேச்சிலும், செயலிலும் மிகுந்த கவனம் தேவை. யாரைப் பற்றியும் யாரிடமும் எந்த வம்பும் பேச வேண்டாம். பெண்களுக்கு பக்தி செயல்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கடகம்:** விஷயங்களை நன்கு கையாண்டு பிறருக்கு நன்மை செய்வீர்கள். ஆன்மிக நாட்டம் கூடும். உழைப்புக்கு மிஞ்சிய வருமானம் உண்டு. மேலிடத்தில் இருந்து நல்ல செய்தி வரும்.

**சிம்மம்:** இன்று வரும் செய்தியால் மகிழ்ச்சி ஏற்படும். சுபச்செலவு கூடும். பணவரவும், செலவுகளும் உண்டு. பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களைச் சந்திக்க வாய்ப்பு வரும்.

**கன்னி:** மின் சாதனங்கள் வாங்குவீர்கள். கலையில் ஆர்வம் வரும். கூடுதல் முயற்சியால் எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள். இளைஞர்கள் தங்கள் குறிக்கோளை நோக்கி முன்னேறுவர்.

**துலாம்:** வளர்ச்சி மேலோங்கும். உடல் அசதி அதிகரிக்கக்கூடும். மனதில் உற்சாகம் அதிகரித்து அது செயல்களில் வெளிப்படும். அநாவசியப் பகை வளராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** அலைபேசியில் கேட்கும் செய்திகளால் நன்மை விளையும். நண்பர்களால் சேமிப்பு கரையும். பயணம் மகிழ்ச்சி தரும். நல்ல சந்திப்பு கிடைக்கும். முயற்சி பலன் தரும்.

**தனுசு:** சற்று அதிகப் பொறுமை தேவை. புதிய பங்குதாரர்கள் இணைவர். நிதி நிலவர நன்மைகள் நிகழ்வதற்கான அறிகுறி தென்படும். பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**மகரம்:** உற்சாகம் அடைவீர்கள். விட்டுக் கொடுத்து வெல்வீர்கள். தாயின் வருத்தம் நீங்கும். பிள்ளைகள் வெற்றி பெறுவர். வேலை மாறுவது பற்றிய சிந்தனை இப்போதைக்கு வேண்டாம்.

**கும்பம்:** பிள்ளைகளின் முயற்சி நிறைவேறும். அரசால் நன்மை வரும். தாயாருக்கும் உங்களுக்கும் இடையே உறவு சீராகி நிம்மதி தரும். மனம் சந்தோஷப்படும்படியான சம்பவங்கள் நடைபெறும்.

**மீனம்:** மனக்குழப்பங்கள் அகலும். எதிரிகள் மனம் மாறுவர். நீங்கள் மதித்துப் போற்றும் நபர்களின் அன்பு கிடைக்கும். குடும்ப நபர்களின் எண்ணிக்கை கூடும். எதிர்பார்த்த லாபம் வரும்.

### அக்கராயன் பகுதிக்குட்பட்ட கிராமங்களில்

# பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அதிகரிப்பு



**கிளிநொச்சி, பெப். 11**

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் பகுதிக்குட்பட்ட கிராமங்களில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துக் காணப்படுகின்றது.**

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட கண்ணகிபுரம், நஞ்சுண்டகாடு, விநாயகர் குடியிருப்பு, கரிதாஸ் குடியிருப்பு மற்றும் மணியங்குளம் போன்ற பகுதிகளில் அந்தந்தப் பகுதிகளின் கிராமசேவகர்கள், கரைச் சிப் பிரதேச செயலக சமூக வலுவூட்டல் உத்தியோகஸ்தர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்நடத்தை உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் மாணவர்களின் இடைவிலகல் தொடர்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டனர். அத்துடன் மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணத்தை கேட்டறிந்ததுடன் அவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ய-12)

## ஊடகவியலாளர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி

ஊடகவியலாளர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். இது தொடர்பான கோரிக்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்ற கொவிட்19 தடுப்பு ஜனாதிபதி செயலணியில் வைத்து குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## குருகுலத்தின் வேதாத்தியான வகுப்புக்கள் ஆரம்பம்

மானிப்பாய்,பெப்.11

கேஷம சபா வேத சிவாகம குருகுலத்தின் வேதாத்தியான வகுப்புக்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 8 மணிவரை மானிப்பாய் வேலக் கைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து சிவாகமப் பிரயோக வகுப்புக்கள் (கிரந்த எழுத்துக்களுடன் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணிவரையும், சமஸ்கிருத பாஷா ஞான வகுப்பு 4 மணி தொடக்கம் 5 மணிவரையும் நடைபெறவுள்ளன.

இலவசமாக கற்பிக்கப்படும் வகுப்புக்களில் சேர்ந்து கற்க விரும்பும் மாணவர்கள் 0774006797 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கலாசாரப் போட்டியில் வென்ற கலைஞர்களுக்கு மதிப்பளிப்பு

மன்னார், பெப் 11

கலை இலக்கிய விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், கலைஞர்களுக்கும் நேற்றுமுன்தினம் பரிசில்கள் வழங்கப்பட்டு, அவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.


நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந்த பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட ரீரியில் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டுக்கான கலை இலக்கிய விழாவில் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் 32 பேர் வெற்றிபெற்றிருந்தனர். அவர்களுக்கான பரிசில்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

கொரோனா காலத்திலும் நானாட்டான் பிரதேச கலைஞர்களும், மக்களும் கலை கலாசாரத்தைப் பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செய்றபடுவது மகிழ்ச்சியையும் புதிய உத்வேகத்தையும் அளிக்கின்றது என்று நிகழ்வில் உரையாற்றிய நானாட்டான் பிரதேச செயலாளர் மா. சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார். (ப-213)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 06 . 1938



மறைவு 10 . 02 . 2021

### சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி

**(மில்க்வைற்)**

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி (மில்க்வைற்) 10.02.2021 நேற்று இரவு 9 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், கந்தையா நாகமுத்து தம்பதியரின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், ரூபினி (முன்பள்ளி ஆசிரியை), நிலாஜினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் ஆதித்தன் ஆகியோரின் மாமனாரும், ஜனார்த்தனியின் பேரனும், காலம்சென்ற நாகேஸ்வரி, அப்புத்துரை, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சின்னம்மா, சிவயோகநாதன், காசிப்பிள்ளை மற்றும் தங்கமுத்து, சிவபாக்கியம், சிவனேஸ்வரி, சிவஞானசுந்தரம் (அப்பு), சுப்பிரமணியம், வரதராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி மேற்கு, கைதடி.**
**077 844 5994**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### பரஞ்சோதிநாதன் புஸ்பமலர்

நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், 16/01, கயிலாசப் பிள்ளையார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி நாதன் புஸ்பமலர் நேற்று (10.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரஞ்சோதி நாதன் (ஓய்வு பெற்ற Highways Department, RDA பிரதான தட்டெழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர்) அன்புக் கணவரும், காலஞ:சென்ற சண்முகம் செல்லம்மா தம்பதியரின் மகளும், கந்தையா சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், தங்கராசா, திருமதி இராமலிங்கம், இராசபூபதி ஆகியோரின் மைத்துனியும், நிஷாந் (லண்டன்), நர்மதா (லண்டன்), டாக்டர் நிஷானி ஆகியோரின் தாயாரும், உதயகுமார் (இலண்டன்) அவர்களின் மாமியாரும், சந்திராதேவி, சிவகுருநாதன், மஞ்சுளாதேவி, செல்வநாதன் ஆகியோரின் மைத்துனியும், வரதலிங்கம், அற்புதமலர், சரோஜினிதேவி, கருணாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**16/1, கைலாசபிள்ளையார் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வீட்டுத் திட்டத்துக்கான நிதியை வழங்காததால் மக்கள் ஆர்ப்பாட்டம்

**யாழ்ப்பாணம், பெப். 11**

**கடன்பட்டு வீடுகளைக் கட்டி முடித்தும், வீட்டுத் திட்டத்துக்கான நிதி வழங்கப்படாததால் கடனாளிகளாக ஆக்கப்பட்டுள்ளோம் என்று தெரிவித்து பாதிக்கப்பட்ட, ஜே 61 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நடைபெற்றது. இது தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்ததாவது;

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடந்த 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 7 1/2 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டத்துக்காக முதற்கட்ட பணம், சீமெந்து மற்றும் சீற் வகைகள் வழங்கப்பட்டன.

ஆறு மாத காலத்துக்குள் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டும் என்று எமக்கு நெருக்குதல்கள் வழங்கப்பட்டதால்,



நாம் அரச, தனியார் வங்கிகளிலும், தனியாரிடத்திலும் கடன்களைப் பெற்று வீடுகளைக் கட்டி முடித்துள்ளோம். எனினும் இன்றுவரை எமக்கான நிதி கிடைக்கப்பெறவில்லை. நாம் பெற்ற கடன்களுக்காக வட்டிகளைக் கட்ட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனால் எமது வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது. எனவே எமக்கான நிதியைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர். (ஐ-320)

## திறந்த போட்டி பரீட்சை நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், பெப்.11

கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சித்தரம் மற்றும் படவரைஞர் பயிற்சித்தரம் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளைமறுதினம் 13ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமை பெற்றிருந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 'செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்' என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## எழுவருக்கு தண்டம்

சாவகச்சேரி,பெப்.11

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கும், மது போதையில் வாகனம் செலுத்திய ஆறு பேருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, மணல் ஏற்றிய சாரதிக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய ஆறு பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## ஒஸ்மானியா கல்லூரியின் புதிய அதிபர் கடமையேற்பு

யாழ்ப்பாணம்.பெப்.11

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு, புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் அல்ஹாஜ் கே.எம்.எம். அனீஸ் நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

பாடசாலை பிரதி அதிபர் தலைமையில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் முஸ்லிம் பாடசாலைகளுக்கான இணைப்பாளர் ஜனாப் ரசூல் ஜெமீல், வவுனியா ஆண்டியா புளியங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஜனாப் எஸ். எம். ஞாபிர், வவுனியா ஆனைவிழுந்தான் முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் ஜனாப் என்.மாஹிர், கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் கலந்து கொண்டனர். (க)



## அபிராமி அன்னையின் கருணை விழா

கொடிகாமம், பெப்.11

அபிராமி அன்னையின் கருணை விழா கொடிகாமம் தவசிகுளம் கண்ணகி அம்மன் ஆலயத்தில் கலைஞானி குமரநாதன் தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஈழத்து சிவசேனை அமைப்பின் தலைவர் க.சச்சிதானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக சைவப்பெரியார் கணபதி துரைசிங்கம், ஓதுவார் மூர்த்தி கனகன் துரைசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் அக்கினி குண்டத்தின் மேல் நூறு கயிறுகளாலான ஊஞ்சலில் அபிராமிப்பட்டரை அமர்த்தி அபிராமி அந்தாதி முற்றோதல், பூரண சந்திர தரிசனம், பரிசில் வழங்கல் நிகழ்வுகள், மாணவர்களின் கலை நிகழ்வு, கௌரவிப்பு நிகழ்வுகள், யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவன் நடேஷ் சோபிதனின் நடன நிகழ்வுகள் மற்றும் ஓதுவார்மூர்த்தி கனகன் துரைசிங்கத்தின் தெய்வீக கானங்கள் இசைக் கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளன. (வ-159)

## அடிக்கல் நடல்

யாழ்ப்பாணம், பெப்.11

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் உள்வீதி சுற்று மண்டபம் அமைப்பதற்கு நாளையதினம் வெள்ளிக்கிழமை அடிக்கல் நடப்படவுள்ளது. காலை 6.30 மணிக்கு இடம்பெறும் சிறப்பு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மண்டபத்துக்கான அடிக்கல் நடப்படும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ப-17)

### நாவாந்துறை, வண்ணார்பண்ணையில்

## நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ். நாவாந்துறை மற்றும் வண்ணார்பண்ணைப் பிரதேசங்களில் இரண்டு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து அந்தப் பிரதேசங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் 670 வரையிலான குடியிருப்புக்கள் சுகாதாரப் பிரிவினரால் சோதனையிடப்பட்டன.

போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்ட 21 வரையிலான குடியிருப்புகளை உடனடியாகத் துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் [illegible] பட்டுள்ளன என்று இந்தப் பிரதேசங்களின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சோதனையின் போது 9 வரையான குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அழிக்கப்பட்டன. நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட இக்குடியிருப்பாளர்கள் எச்சரிக்கப்பட்டனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரி வித்தனர். அத்துடன் டெங்குத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடியிருப்புக்களில் புகையும் அடிக்கப்பட்டது. (ய-177)

## கந்தபுராண தொடர் படிப்பு

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் நாளை வெள்ளிக்கிழமை கந்தபுராண தொடர் படிப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 8 மணிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும், பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கந்தபுராணப் படிப்பு இடம்பெறும்.

கந்தபுராண தொடர் படிப்பு எதிர்வ[illegible] ஆலய பிரதம குருக்கள் தெரிவித்தார் (ப-17)

## மாசிமக இலட்சார்ச்சனை

தெல்லிப்பழை,பெப்.11

தெல்லிப்பழை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் மாசிமக இலட்சார்ச்சனை எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாசிமகப் பெருவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொரோனாத் தொற்று நீர்வழியாக பரவாதாம்!

**கூறுகின்றார் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே**



கொழும்பு,பெப்.11

**கொரோனாத் தொற்று நீர்வழியாக பரவாது என்று கொரோனா ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனுராதபுரம் கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் கொரோனாத் தொற்றுடைய நோயாளிகள் பயன்படுத்திய கழிவுநீர், பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பகுதியில் பாய்வதாக ரோஹன பண்டார தெரிவித்தார். நீர் மாசுபடும் என்பதால் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை இலங்கையில் நிராகரிக்கப்பட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்ததாவது;

கொரோனாத் தொற்று காற்று வழியாக மட்டுமே பரவுகிறது. மாறாக நீர் வழியாகப் பரவுவதில்லை.

இருப்பினும் இயற்கை நீருடன் இத்தகைய அசுத்தமான நீர் கலப்பது வேறு நோய்கள் தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்பதால், இது குறித்து விசாரணை நடத்தப்படும் -என்றார். (ஐ-இ)

*உயர்கல்விக்காக*

## வெளிநாடு செல்லும் மாணவருக்கு தடுப்பூசி



கொழும்பு, பெப்.11

உயர்கல்வி நடவடிக்கைக்காக வெளிநாடு செல்லவுள்ள இலங்கை மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்குவது தொடர்பில் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது என வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் மாணவர்கள் மீண்டும் அங்கு சென்று கல்வி பயில்வதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு செல்லும் மாணவர்களுக்குத் துரிதமாக தடுப்பூசியை வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் தேவையான தடுப்பூசிகளைப் பெற்று ஏப்ரல் மாதத்தில் நாம் திட்டமிட்டவகையில் தடுப்பூசியை வழங்க முடியும் என நம்புகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

*சுற்றுலாத்துறையில்*

## முன்கள பணியாளர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள்

கொழும்பு, பெப்.11

சுற்றுலாத்துறையில் முன் வரிசையில் பணியாற்றுபவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹொட்டல்களின் பணியாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் சாரதிகள் போன்றோருக்கே இவ்வாறு தடுப்பூசி வழங்குவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 50ஆயிரம் தடுப்பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



## சலுகைக் கொடுப்பனவில் மாணவர்களுக்கு மடிக்கணினி

கொழும்பு, பெப். 11

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு சலுகைக் கொடுப்பனவின் கீழ் மடிக்கணினிகளை வழங்கும் திட்டம் ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்தத் திட்டத்துக்காக மக்கள் வங்கி 3 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இணைய இணைப்பு, மென்பொருள் பொதி மற்றும் 4 வருட உத்தரவாதத்துடன் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. ஒரு கணினியின் பெறுமதி 80 ஆயிரம் ரூபாவாகும்.

தொழிலொன்று கிடைத்த பின்னர் 6 ஆண்டுகளில் மொத்தப் பெறுமதியை திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

மாணவராக இருக்கும் காலத்தில் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை 500 ரூபாவாகும்.

2021ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நுழைவைப் பெறும் 6 மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில் அதற்கான கடிதங்களை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி வழங்கி வைத்தார். (ஒ.5)

*தொற்றாளரை ஏற்றிச்செல்ல*

## தனியார் வாகனங்களை பெறுவதற்கு தீர்மானம்

கொழும்பு, பெப்.11

கொரோனாத் தொற்றாளர்களை ஏற்றிச் செல்வதற்கான வாகன பற்றாக்குறையால் தனியார் பிரிவிடமிருந்து வாகனங்களைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

தற்போது அம்புலன்ஸ் வாகனங்களின் எண்ணிக்கை போதுமானவையாக இல்லாத காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் மாகாண சபைகளூடாக இதற்குத் தேவையான நிதி பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் வாகனங்களை வழங்குவதற்கு எவரேனும் விருப்பம் கொண்டிருந்தால், தமது சுகாதார அதிகாரிகளுக்கு அது குறித்து அறிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-இ)

## தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு மே மாதத்துக்குள் நிறைவு

கொழும்பு, பெப்.11

இலங்கையில் எதிர்வரும் வைகாசி மாதத்துக்குள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் நிறைவு செய்யும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். சுற்றுலாத்துறை அமைச்சில் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா ஆபத்து இன்றி சுற்றுலாப் பயணிகள் பார்வையிடக்கூடிய பாதுகாப்பான நாடாக இலங்கை மாறும். இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பான நடவடிக்கைகள் சுற்றுலா மேம்பாட்டு ஆணைக் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

*தென் கிழக்கு பல்கலையின்*

## துணைவேந்தர் பதவிக்கு 11 பேர் விண்ணப்பம்

கொழும்பு, பெப்.11

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு 11 பேர் விண்ணப்பித்துள்ளனர் எனப் பல்கலைக்கழக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விண்ணப்பிக்கும் காலம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்துள்ள நிலையில், 7 பேராசிரியர்களும் 4 கலாநிதிகளும் என 11 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகக் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் செயற்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயிலும் உள்ளடங்குகிறார். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாத நடுப் பகுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜீமின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 7ஆம் திகதியுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## பதுளை மாநகர சபை செயற்பாடுகள் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப்.11

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முசம்மில் கையெழுத்திட்ட சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு மூலம் பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முசம்மில் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து மாநகர சபையின் செயற்பாடுகள் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன்படி பதுளை மாநகர சபையின் விசேட ஆணையாளராக எச். எம். ஜீவந்த ஹேரத் நேற்று புதன்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் மாநகர சபை சட்டங்களின் அடிப்படையில், மாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தமிழ் மக்களுக்கு எதிராக இன்றும் இனப்படுகொலை

## கஜேந்திரகுமாரின் கருத்தால் நாடாளுமன்றில் பெரும் மோதல்



**கொழும்பு, பெப். 11**

**இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நியாயம் கோரியும், இன்றும் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் இனப்படுகொலையைத் தடுக்க வேண்டும் எனக் கோரியுமே 'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி இடம்பெற்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

'இன்றும் இனப்படுகொலை' என்ற வார்த்தையை அவர் மீளப் பெற வேண்டும் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பெரும் கோசம் எழுப்பினர். இதனால் சபை அமர்வு சிறிது நேரம் களேபரமானது.

நாடாளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது அவர் தெரிவித்ததாவது:

### பத்துக் கோரிக்கைகள்

பிரதான பத்துக் கோரிக்கைகளை முன்வைத்து 'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி முன்னெடுக்கப்பட்டது. மேலும் நான்கு உப கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

வடக்கு கிழக்கு பூமி தமிழ் பேசும் மக்களின் தாயகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான தனித்தாயகமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றமையையும், இன்றும் அது தொடர்கின்றது என்பதையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையின் கீழ் விசாரிக்க வேண்டும் என்று உரையாற்றிக்கொண்டிருந்தார்.

### தெளிவில்லை

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, இனப்படுகொலை இடம்பெற்றதாகவும், இன்றும் இடம்பெற்று வருவதாகவும் கூறுகின்றார். அவர் எதனைக் கருத்தில் கொண்டு இவ்வாறு கூறுகின்றார் என்று தெளிவில்லை எனக் கேள்வி எழுப்பினார்?

இதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், இனப்படுகொலை என்பது வெறுமனே இனத்தைக் கொல்வது மட்டுமல்ல, ஒரு இனக் குழுமத்தை இலக்கு வைத்து அவர்களின் அடையாளத்தை அழிப்பதும் இனப்படுகொலை என்றே கருதப்படும். 2009 ஆம் ஆண்டு வரையில் உயிர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதைப் போலவே இப்போதும் திட்டமிட்டு வடக்கு கிழக்கு தமிழர்களின் அடையாளங்களை அழிக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. காலனித்துவக் கொள்கையில் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன, தொல்பொருள் திணைக்களம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றது. இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்கள் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்றன. இதுவும் இனப்படுகொலையாகும், என்றார்.

### வார்த்தை தவறு

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ஹர்ஷ டி சில்வா, எமக்குத் தெரிந்தவரையில் இனப்படுகொலை என்பது அதிகளவான மக்களை கொன்று குவிப்பதாகும் என்றார். இதன்போது ஆளும் தரப்பில் இருந்து ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இனப்படுகொலை என்பது எமக்குத் தெரிந்த வரையில் திட்டமிட்ட கொலையாகும். அதிகளவான மக்களை அல்லது ஒரு இனக்குழுவை கொல்வது இனப்படுகொலை என்று அர்த்தப்படும். ஆனால் நீங்கள் கூறும் காரணிகளுக்கு இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது முற்றிலும் தவறான ஒன்றாகும். எனவே அதனைத் திருத்திக்கொள்ளுங்கள் என்றார்.

### நான் சட்டத்தரணி

'இனப்படுகொலைக்கான வரைவிலக்கணம் பற்றி நான் இங்கு பேச வரவில்லை. எந்த விதத்திலும் இதற்கான வரைவிலக்கணத்தை முன்வைக்க முடியும். ரோமானிய பிரகடனத்தின் ஐந்தாம் உறுப்புரையை வாசியுங்கள்' என்று கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

இனப்படுகொலை என்ற வார்த்தையை நீங்கள் சரளமான விடயங்களுக்குப் பயன்படுத்த முடியாது என்று ஹர்ஷ குறிப்பிட்டார்.

'நான் ஒரு தகுதியான சட்டத்தரணி, எனக்கு எவ்வாறு வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது தெரியும். இனப்படுகொலை நடந்தது. அதற்கான நியாயத்தைக் கேட்கிறோம். இதற்கான சாட்சியில் நானும் ஒருவன், அதே போல் இன்றும் எமது அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதனையே நான் அவ்வாறு கூறுகின்றேன்' என்று கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

### பாரதூரமான வார்த்தை

'நீங்கள் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது. நீங்கள் கூறும் காரணிகளுக்குப் பொருத்தமான வார்த்தை இதுவல்ல' என்று இராஜாங்க அமைச்சர் கப்ரால் கூறினார். அதற்கு கஜேந்திரகுமார், நான் சட்ட முறைமைக்கு அமையவே பேசுகிறேன். நீங்கள் ரோமானியப் பிரகடனத்தைப் பாருங்கள். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கூறும் குற்றச்சாட்டை ஏன் உங்களால் விசாரிக்க முடியாதுள்ளது. முதலில் அதனைச் செய்யுங்கள், என்றார். அதற்கு ஹர்ஷ டி சில்வா, நீங்கள் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம். அது பாரதூரமான வார்த்தை என்றார்.

### விவாதிக்க வாருங்கள்

'இனப்படுகொலை என்ற வார்த்தையை நான் மிகவும் பொறுப்புடன் இந்த இடத்தில் பயன்படுத்துகிறேன். உங்களிடம் நான் கேட்பது ஒன்றுதான், எதிர்க்கட்சித் தலைவரும் ஆளும்கட்சி தலைவரும் வாருங்கள். நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவோம். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதா இல்லையா என்று விவாதிக்கலாம். அதற்கு ஏன் அஞ்சுகிறீர்கள்' என்று கஜேந்திரகுமார் கேள்வி எழுப்பினார்.

இதனால் சபையில் பெரும் கருத்து மோதல் ஏற்பட்டது. (ஒ-இ)

## இலங்கை கடற்படைக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, பெப்.11

இலங்கைக் கடற்படைக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி இந்திய மீனவர்களின் படகு, நெடுந்தீவுக் கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையினரின் படகு மோதி ஏற்பட்ட விபத்தில் மூழ்கியதில் நான்கு மீனவர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கைக் கடற்படையினரைக் கைதுசெய்யக்கோரியே இந்திய உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்துக்கு தலா ரூபா 5 கோடியை இலங்கை அரசிடமிருந்து பெற்றுத்தருமாறும் இந்த மனுவில் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## ஆடு கொண்டு சென்றவருக்கு தண்டம்



சாவகச்சேரி,பெப்.11

ஆட்டின் கால்களைக் கட்டி, மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற நபருக்கு, சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.

சித்திரவதைக்கு உள்ளாகும் நிலையில் குறித்த நபர் ஆட்டைக் கொண்டு சென்றார் என்று குற்றஞ்சாட்டி, கொடிகாமம் பொலிஸாரால், தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஆட்டைக் கொண்டு சென்றவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## தூண்டல் மீன்பிடியில் ஈடுபடும் திருமலை மீனவர்கள் போராட்டம்



திருமலை, பெப்.11

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் சிறு மீன்பிடிப் படகுகளில் தூண்டல் மூலமாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பெரும் படகுகள் மூலமாகவும், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தியும் குறித்த பகுதியில் பலர் மீன்பிடியில் ஈடுபடுவதால் தாம் பாதிக்கப்படுகின்றோம் என்று தெரிவித்தே மீனவர்கள் திருகோணமலை மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் தாம் தொழிலில் ஈடுபட தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தந்தை கடற்றொழில் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் தமக்கு அனுமதி வழங்கினார் என்றும், தற்போது தாம் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் தொழிலை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் அந்த மீனவர்கள் கவலை தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு தமது பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்த மீனவர்கள் தீர்வுகள் எட்டப்படாவிடின் பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வும் தாம் தயாராக உள்ளோம் என்றும் தெரிவித்தனர். (ப)

# விளையாட்டுத்துறைக்கு புதிய சட்டம் விரைவில்

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.11
இலங்கையில் விளையாட்டுத்துறையை நவீனமயப்படுத்தும் நோக்கில் புதிய சட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அதனை விரைவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பதிலளிக்கையில் இதைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நான் அமைச்சராகி ஐந்து மாதங்கள்தான் ஆகின்றன. கிரிக்கெட் விளையாட்டு வீழ்ச்சியடைய ஆரம்பித்து 05 வருடங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலப்பகுதியில் கிரிக்கெட் விளையாட்டு பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. கடந்த காலத்தில் நடந்தவை பற்றிப் பேசுவதால் பிரயோசனம் எதுவுமில்லை. எதிர்காலத்தில் சிறந்த வேலைத்திட்டத்துடன், நாம் பயணிக்க வேண்டும். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை அரசியல்வாதிகளிடம் கையளிக்க முடியாது. ஐ.சி.சியின் கட்டுப்பாட்டின் கீழ்தான் அது இயங்குகிறது -என்றார். (வ)

# ஒவ்வொரு பிரஜையின் தலையிலும் ரூபா 6 லட்சத்து 70 ஆயிரம் கடன்

### இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, பெப். 11
**இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் 6 லட்சத்து 70 ஆயிரம் ரூபா கடனாளிகள். இலங்கையின் ஆட்சியாளர்கள் கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட மொத்தக் கடன்களை, நாட்டின் மொத்தச் சனத்தொகையால் பிரிக்கும்போது பெறப்பட்ட தனிநபர் கடன் சுமையே இது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இலங்கை அரசு 14 ஆயிரத்து 605 பில்லியன் ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளது. இதில் 8 ஆயிரத்து 258 பில்லியன் உள்நாட்டுக் கடன். 6 ஆயிரத்து 346 பில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன்.
இதன் அடிப்படையில் இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் 2 லட்சத்து 91 ஆயிரத்து 133 ரூபா வெளிநாட்டுக் கடனைச் செலுத்த வேண்டும். (ஒ-இ)

### இலங்கை உள்ளிட்ட நாடுகளில்

# குழந்தைகளை தத்தெடுப்பதை நிறுத்தியது நெதர்லாந்து

கொழும்பு,பெப்.11
இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து குழந்தைகளை தத்தெடுக்கும் செயற்பாட்டை நெதர்லாந்து இடைநிறுத்தியுள்ளது.
உத்தியோகபூர்வமாக நடத்தப்பட்ட விசாரணையில் பல துஷ்பிரயோகங்கள் கண்டறியப்பட்ட பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
1967 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை இலங்கை, பங்களாதேஷ், பிரேசில், கொலம்பியா மற்றும் இந்தோனேசியா நாடுகளில் இருந்து தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பில் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.
நெதர்லாந்து அரசாங்கம் பல வருடங்களாக இந்த துஷ்பிரயோகம் சம்பந்தமாக தலையீடு செய்யத் தவறியுள்ளது என்று நெதர்லாந்து பிரதேச பாதுகாப்பு அமைச்சர் சென்டர் டெகர் தெரிவித்துள்ளார்.
புள்ளிவிபரங்களுக்கு அமைய 1981 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை நெதர்லாந்து பிரஜைகள் இலங்கையில் இருந்து 2 ஆயிரத்து 972 குழந்தைகளை தத்தெடுத்துள்ளனர். (ஐ-இ)

# வரம்பு மீறுகிறார் ஆணையாளர்

### ஐ.நா.வுடன் சீறிப் பாய்கிறது அரசு

கொழும்பு, பெப். 11
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிசெல் பச்லெட் வரையறைக்கு உட்பட்டுச் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், போர் முடிவடைந்த பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் குறித்து, சர்வதேசம் முன்வைத்த கோரிக்கைகள் பலவற்றை முழுமையாக நிறைவேற்றியுள்ளோம் என்றார்.
தேசிய பாதுகாப்பு, நாட்டின் சுயாதீனம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி அரசு செயற்படும் எனத் தெரிவித்த அவர், உள்ளக விவகாரங்களிலும் இறைமைக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளிலும் பலவந்தமாக எவரும் தலையிட முடியாது என்று குறிப்பிட்டார்.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஒ-இ)

# ஊடகங்களைத் தணிக்கை செய்யும் எந்தவொரு நடவடிக்கையும் இல்லை

### அரசு அறிவிப்பு

கொழும்பு, பெப்.11
இலங்கையில் ஊடகங்களைத் தணிக்கை செய்யும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அரசு தெரிவித்துள்ளது.
இந்த நிலையில், ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களின் கட்டுப்பாடு மற்றும் தணிக்கை தொடர்பான கூற்றுக்கள் தவறானவை என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இதேவேளை, செய்தி வெளியீடுகளில் ஒரு சார்பு அறிக்கை மற்றும் நியாயமற்ற விடயங்களுக்குத் தீர்வுகாண மட்டுமே விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஊடகத்துறை மிக முக்கியமான துறை ஊடகப் பணியாளர்கள் ஒரு நாட்டில் மிகுந்த நம்பிக்கைக்கும், மரியாதைக்குரியவர்கள். ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதை மக்கள் நம்புகிறார்கள். எனவே பொதுமக்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். இதேவேளை, ஊடகங்கள் தொடர்பாக ஏதேனும் விதிமுறைகள் கொண்டுவரப்பட்டால், அது ஊடக ஊழியர்களைப் பாதுகாப்பதும், சில ஊடகங்கள் வழியாக பக்கச்சார்பான ஊடக அறிக்கைகள் வெளியிடப்படுவதைத் தடுப்பதுமாகவே அமையும். -என்றார். (ஐ)



யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த்திருவிழா நேற்று புதன்கிழமை காலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச)

# பன்னவேலைகள் பயிற்சி விரைவில்

சாவகச்சேரி,பெப்.11
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோயிற்குடியிருப்பு வட்டாரத்தில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலைய மண்டபத்தில், பன்னவேலைகள் பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
நகரப் பகுதியில் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையைக் குறைப்பதற்கும், பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வட்டார உறுப்பினர் திருமதி சுபோதினி சகாயராஜாவின் முயற்சியால், தேசிய அருங்கலைகள் பேரவையால் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (க-9)

# யாழ்.நாடக ரசிகர்களுடன் சூம் ஊடாகக் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், பெப். 11
சமகாலத்தில் நிலவுகின்ற அரங்கச் செயற்பாடுகள், ஆற்றுகைகள் தொடர்பாக அரங்கப் பார்வையாளர்கள், நாடக ஆர்வலர்களின் எண்ணப்பாடுகள், விமர்சனங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று சூம் செயற்றிட்டத்தின் ஊடாக இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்..
ID 75840893960 pass word 12345 @ ஊடாக சூம் செலிக்குள் யாழ்ப்பாண நாடக ரசிகர்கள் கலந்து கொண்டு தொடர்ச்சியான நாடக இயக்கத்துக்கான ஆய்வுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ப)

# கசிப்பால் வந்த வினை

சாவகச்சேரி, பெப்.11
750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த நபரை 200 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.
இதை அடுத்து அவரை 200 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துவதற்காக நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு மன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (ப-9)

# பாடசாலை வளாகத்தில் ஆயுதங்கள்: விசேட தேடுதல் நடவடிக்கை

மட்டக்களப்பு,பெப்.11
மட்டக்களப்பு வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய வளாகத்தில் ஆயுதங்கள் இருப்பது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு தேடுதல் நடத்தப்பட்டது.
களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து இந்தத் தேடுதலை முன்னெடுத்தனர்.
எனினும், இதன்போது ஆயுதங்கள் எதுவும் கண்டெடுக்கப்படாத நிலையில் தேடுதல் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. (ஐ-இ)

# சிறைச்சாலைகளுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு.பெப்.11
வெலிக்கடை, கொழும்பு மற்றும் மகசின் சிறைச்சாலைகளை சோதனையிடுவதற்காக, மீண்டும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
சிறைச்சலைகளில் ஏற்பட்ட கொரோனா பரவலை அடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் சோதனைகள் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)




# ரத்நாயக்கவுக்கு கொவிட் தடுப்பூசி

கொழும்பு.பெப்.11
வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி. பி. ரத்நாயக்கவுக்கு நேற்று கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.
இராணுவ மருத்துவமனையில் அவர் கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
கொரோனாத் தொற்று உறுதியான இருவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிய நிலையில் சி. பி. ரத்நாயக்க, கடந்த சில மாதங்களில் இரண்டு சந்தர்ப்பங்களில் தனிமைப்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# கடும் குற்றங்களுக்கான விசாரணைகளை மூன்று மாதங்களுக்குள் முடிவுறுத்தவும்

## சட்டமா அதிபர் கோரிக்கை

**கொழும்பு, பெப். 11**
**மிகப் பெரிய குற்றங்கள், போதைப் பொருள் குற்றங்கள் போன்றவை தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை 3 மாதங்களுக்குள் நிறைவு செய்யவேண்டும்.**

அந்தக் கோப்புக்களை சட்டமா அதிபருக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்குப் பணிப்புரை விடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் சட்டமா அதிபர் கோரியுள்ளார். இந்தத் தகவலை சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி வெளியிட்டுள்ளார்.
இத்தகைய குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகள் முறையாக இடம்பெறாமையால் நாட்டின் நீதிமுறை சரிவர இயங்க முடியவில்லை என்று சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.
விசாரணைகளின் தாமதம் காரணமாகச் சாட்சியாளர்கள் மற்றும் பிரதிவாதிகள் நியாயமான முறையில் நடத்தப்படுவ



தில்லை. நியாயமான விசாரணைக்கு சந்தேக நபர்களுக்கு உள்ள உரிமை மீறப்படுகின்றது. இவ்வாறான விடயங்களை கவனத்தில் எடுத்து மூன்று மாதங்களுக்குள் விசாரணைகளை நிறைவுறுத்தப் பணிக்கவேண்டும் என்று பொலிஸ்மா அதிபரிடம் சட்டமா அதிபர் கேட்டுள்ளார்.
வழக்கு விசாரணைகளை 3 மாதங்களில் நிறைவுறுத்த முடியாத சந்தர்ப்பங்களில் மூத்த பொலிஸ் அதிகாரி இதற்கான காரணத்துடன் கடிதம் மூலம் அறிவிக்கவேண்டும் எனவும் பொலிஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-இ)

# 27 பொருள்களின் விலைகள் குறைப்பு: நடைமுறையில் சாத்தியப்படவில்லை

கொழும்பு, பெப். 11
கடந்த 8 ஆம் திகதி முதல் 27 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும் எனவும் இந்தக் கட்டுப்பாட்டு விலை எதிர்வரும் 3 மாத காலத்துக்கு மாற்றம் செய்யப்படமாட்டாது எனவும் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் தெரிவித்திருந்த போதிலும், நடைமுறையில் அந்த விடயம் சாத்தியமாகவில்லை என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத் தலைவர் ரஞ்சித் வித்தானகே குற்றம் சாடியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று வெளியான வர்த்தமானி அறிக்கையில் பொதி செய்யப்படாத ஒரு கிலோ கிராம் சீனியின் அதிகூடிய சில்லறை விலை 85 ரூபாவாகவும், பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் சீனியின் அதிகூடிய சில்லறை விலை 90 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. சுமார் 3 மாத காலத்துக்கு முன்னதாக வெளியான வர்த்தமானியில் கட்டுப்பாட்டு விலையை நடைமுறைப்படுத்த தவறிய அமைச்சர் பந்துல குணவர்தன, தற்போது புதிதாக 27 அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
2020 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி முதல் இதுவரை காலவரையில் பொதுமக்கள் அதிகளவான விலைக்கே அத்தியவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர், எனவே கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை இனங்கண்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் -என்றார். (ப)

○ ஆர்.சனத்

# ‘பாம்பாட்டியும் பாம்பும்’ ராஜபக்சவும் விமலும்!



“பாம்பாட்டியுடன் சென்று பாம்பு ஆடியபோது அதற்கு ஊர் மக்கள் முட்டை, பணம் எல்லாம் வழங்கினர். இதனைப் பார்த்து ஆசைப்பட்ட பாம்பு, நான் தனியே சென்று ஆடினால் இவை அனைத்தையும் தனித்து அனுபவிக்கலாம் என எண்ணியது. மறுநாள் பாம்பு தனியே சென்று ஆட முற்பட்டது. ஊர் மக்களோ அச்சத்தில் தடியால் அடித்து பாம்பைக் கொன்று விட்டனர்.”
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கூறிய குட்டிக் கதையே இது.
விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியினர் தனிவழிப்பயணம் செல்வார்களா அல்லது வேறு கூட்டணியில் இணைவார்களா என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு நேரடிப் பதிலை வழங்காமல், சாகர காரியவசம் கூறிய இக்கதையின் பின்னால் ஆயிரம் அரசியல் அர்த்தங்களும் புதைந்துள்ளன.
அதாவது ராஜபக்சக்கள் இன்றி விமல் உள்ளிட்ட தரபினரால் அரசியல் பயணத்தை முன்னெடுக்க முடியாது. அவ்வாறு முன்னெடுத்தாலும் அதற்கு மக்கள் ஆதரவு வழங்கமாட்டார்கள் என்பதே கதையின் சுருக்கம் சாரம் சமாகும்.
அதேவேளை, மொட்டு தலைமையிலான கூட்டணியில் விமல் அணியினர் ‘சமஉரிமை’ பெற்ற பங்காளிகளாக அங்கம் வகிக்கின்றனரா அல்லது ‘சரணாகதி அரசியல்’ நடத்துவதற்காக தஞ்சம் புகுந்துள்ளனரா என்ற வினாவுக்கும் கதை ஊடாக களம் அமைத்துக்கொடுத்துள்ளார் மொட்டுக்கட்சியின் பொதுச்செயலாளர்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்குவதற்கு விமல் வீரவன்ஸ துளியளவும் பங்களிப்பு செய்யவில்லை எனவும், கொழும்பு மாவட்டத்தில் தனக்கான விருப்பு வாக்குகளைக் கூட அவரால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை எனவும் சாகர விளாசித் தள்ளியுள்ளார்.
சாகர, தனி நபராக விமலை எதிர்க்கவில்லை , தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்துள்ள அவருக்கு அவ்வளவு ‘நிறைவேற்று’ அதிகாரமும் வழங்கப்படவில்லை. எனவே, இதன்பின்னணியில் இரு ராஜபக்சக்கள் இருக்கின்றனர், அவரை இயக்குகின்றனர் என்பதே உண்மை. குறிப்பாக பஸில் ராஜபக்ச அணியிலுள்ள உறுப்பினர்களே விமல்மீது சொற்கணைகளைத் தொடுத்து வெளுத்துவாங்கி வருகின்றனர். இதற்கு மஹிந்த ராஜபக்ச தரப்பும் ஆதரவாக இருக்கின்றது.
மஹிந்த ராஜபக்சவை நீக்கி விட்டு, பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவியை கோட்டாபய ராஜபக்சவுக்கு வழங்கவேண்டும் எனக்கூறியதாலேயே விமலுக்கு இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆக ராஜபக்சக்களுக்கு இடையிலும் ‘அதிகாரப்’ போட்டி இருப்பதும் ஏதோவொரு விதத்தில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.
புதிய அரசமைப்பு உட்பட பல விடயங்களை எதிர்காலத்தில் செய்யவேண்டியுள்ளன. எனவே, இனிவரும் காலப்பகுதி இந்த அரசுக்கு அக்கினிப்பரீட்சையாகவே அமையப்போகின்றது. அதற்கான அபாயச் சங்கே தற்போது விமல் ஊடாக ஊதப்பட்டுள்ளது.

## கஞ்சா வைத்திருந்த இருவருக்குத் தண்டம்

கிளிநொச்சி,பெப்.11

கஞ்சா வைத்திருந்த இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஒரு கிலோ 400 கிராம், மற்றும் ஒரு கிலோ 720 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ)

## விண்ணப்பம் கோரல்

கொடிகாமம்,பெப்.11

நீதி அமைச்சால் வெற்றிடமாக காணப்படும் 297 திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பதவிகளுக்கு தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்திய டைந்திருப்பதுடன் 30 வயதுக்கு குறையாதவர்களாகவும் 55 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பிறப்புச் சான்றிதழ்,கல்விச் சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை,வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் நற்சான்றிதழ், மேலதிக கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழல் பிரதிகளுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் நீதியமைச்சு, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-159 .9)

# நோயாளரைப் பார்வையிடவரும் உறவினர் வெயிலில் காத்திருப்பு

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி, பெப்.11

**சாவகச்சேரி மருத்துவமனையில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிட 'பாஸ்' நடைமுறை உள்ளதால், நோயாளர்களைப் பார்வையிட வரும் உறவினர்கள், தாம் கொளுத்தும் வெயிலில் காத்திருக்கவேண்டிய நிலை உள்ளது என்று கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மருத்துவமனையில் இவ்வருட ஆரம்பம் முதல் நோளர்களைப் பார்வையிடுவதற்கு பாஸ் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கியுள்ள நோயாளரைப் பார்வையிட வருவோர் நோயாளரைச் சுற்றி கூட்டமாகக் காணப்படுகின்றனர். கொரோனா அச்சம் காரணமாக பாஸ் உள்ளவர்கள் மட்டும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் உள்ளே நோயாளர்களைப் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர். எனவே மருத்துவமனை வளாகத்தின் அடுத்த வாசலில் உள்ள பார்வையாளர் மண்டபத்தில் பார்வையாளர்களைத் தங்கவைக்க நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றனர்.

இது தொடர்பில் மருத்துவமனைப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

மருத்துவமனையின் பிரதான வாசலுக்கு சற்றுத் தள்ளிக் காணப்படும் வாசல் ஊடாக பார்வையாளர்கள் உள்ளே வந்து அங்குள்ள பார்வையாளர் மண்டபத்தில் தங்கி, நோயாளரைப் பார்வையிடலாம் - என்றார். (ப-9)



சாவகச்சேரி பிரதேச சபையின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இராமாவில் பரணி பாலர் பாடசாலை முன் வீதி தார் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மழை காலத்தில் வெள்ளம் தேங்கி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்பட்ட இந்த வீதி கிராம மக்களின் வேண்டுகோளிற்கமைய தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. (ய-159)

## யுவதிகளுக்கான இலவச கராத்தே பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யுவதிகளுக்கான 3 மாதகால இலவச தற்காப்புக் கலை (கராத்தே) பயிற்சிநெறி ஆரம்பிக்கப் படவுள்ளது.

வடக்கு மாகாண இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இந்த பயிற்சிநெறி எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் இரு நிலையங்களில் பயிற்சிகள் நடைபெறும். வடமாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து யுவதிகளும் இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்ய முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் "மகளிர் தற்காப்புக்கலை பயிற்சி நெறி 2021" செயலாளர் கல்வி அமைச்சு , வ.மா ...சம் மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். ...ன்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டு... மேலதிக விவரங்களை பெற edumin.np...ov.lk என்ற இணையத்தளம் மற்றும் 021 ...22 2203, 077 736 0783 என்ற தொலை...பசி இலக்கங்களுடனும் தொடர்பை ஏற்ப...த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (...ப)

## இடமாற்றம்

சாவகச்சேரி, பெப். 11

பருத்தித்துறை பிரதேச செயலக நி... உத்தியோகத்தராக, தென்மராட்சி பி... செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்...க கடமையாற்றிய மா.முரளி நேற்றைய...ம் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவரின் இடத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலக தாபனப் பிரிவில் கடமையாற்றிய ஜெயந்தி ஜெயசீலன் பதில் நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-9)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்: 06.12.1942 விண்ணுலகில்: 25.01.2020



அமரர் ஐயாத்துரை
மனோன்மணி

திதி: தை அமாவாசை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத் தலைவி.
தங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
குருநாதர் கோவிலடி
தெல்லிப்பழை கிழக்கு
தெல்லிப்பழை.

# 9ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



அமரர்
**நடராசா காசி வேந்தன்**
(MA.B.Com, Dip in pds, Dip in mgt,
முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் சமுர்த்தி
மகா சங்கம் - உடுவில்)

தோற்றம் : 25.06.1967 மறைவு : 22.01.2012

திதி: தை அமாவாசை (11.02.2021)

அமைதிக்கு ஓர் உதாரணமாம் - நீர்
ஆறறிவுடைய ஆசானும் - நீர்
இல்லத்தின் அரசனே - நீர்
ஈவிரக்கம் கொண்டவரே - நீர்

உள்ளமதில் ஒழிவின்றி
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே!
எல்லோர் மனங்களிலும் என்றும் மறவாத நாளில்
ஏகன் உங்களை அழைத்ததேனோ!

அபிராமி பட்டர் முத்தியடைந்த இந்நாளில்
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

கற்பக பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு

மனைவி, பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்





மலர்வு 06.10.1928 உதிர்வு 13.01.2021

மலர்வு 16.11.1935 உதிர்வு 05.01.2021

அமரர்
**திரு. கதிர்காமு துரைராசா**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்-உடையார்)

அமரர்
**திருமதி துரைராசா மீனாட்சிசுந்தரம்**

கடந்த 05.01.2021, 13.01.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் விருட்சங்கள் அமரர் கதிர்காமு துரைராசா, அமரர் திருமதி துரைராசா மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 12.02.2021 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

மேலும் எமது குடும்பத்தின் தீபங்கள் அணைந்த செய்தியறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவி புரிந்தோர், இறுதிச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குறிப்பு: தயவுசெய்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

உடையார் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 07 . 1930

மறைவு 10 . 02 . 2021



## நடராசா மகேஸ்வரி

மாதகல் மேற்கு மாதகலை பிறப்பிடமாகவும் இல.50, கீரிமலை வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேஸ்வரி அவர்கள் நேற்று (10.02.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர், முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் (முன்னாள் எழுதுவினைஞர், பொது வேலைத் திணைக்களம்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் நித்தியானந்தன் (முன்னாள் பணியாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்), சற்குணானந்தன் (டென்மார்க்), நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஞானசுந்தரம், தனலட்சுமி, ஜெயராணி (டென்மார்க்), ஜெயமனோகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவனேஸ்வரி (சுவிஸ்), சிவசேகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஞானசேகரன் மற்றும் இராஜசேகரன் (சுவிஸ்), மாலதி (ஆசிரியை), நிறஞ்சன் (சுவிஸ்), தர்சன் (பிரான்ஸ்), நிதர்சன், நிரஞ்சலா, சுரேன் (டென்மார்க்), ஜனோசன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜனனி, யாழினி, செந்தூரன், சோதிகா, மயூரன், ஜெய்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.02.2021) புதன்கிழமை 2 மணியளவில் அன்[illegible] இல்லத்தி[illegible] நடைபெற்று, பூதவுடல் [illegible]தகல் [illegible] இந்து மயா[illegible]. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண[illegible] கொள்ளவும்.

இல.50, கீரிமலை [illegible]
சண்டிலிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
077 5906528

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 02 . 1937

மறைவு 10 . 02 . 2021



## திருமதி இரத்தினம் செல்லம்மா

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் செல்லம்மா அவர்கள் நேற்று (10.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி யோகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சீனியர் பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் கணேசன் (வல்வெட்டித்துறை), சாந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற கலா, வசந்தி (கனடா), மகேசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சபேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி (வல்வெட்டித்துறை), பாலசிங்கம் (ஜேர்மனி), லோகராஜா (கனடா), மஞ்சுளா (லண்டன்), தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, பொன்னுத்துரை, ஐயாத்துரை மற்றும் பாக்கியம், பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பெறாமக்களின் பெரியம்மாவும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

612, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 176 1007

## சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை
## கோண்டாவில்
## தொழிற்பயிற்சி விண்ணப்பம் கோரல்-2021

பின்வரும் பயிற்சிகளுக்கு பயில விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்

1. நவீன தையல் பயிற்சி
2. ஓப்செற் அச்சுப் பயிற்சி
3. விவசாய உற்பத்திப் பயிற்சி

16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களை பூர்த்தி செய்து 01.03.2021 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

முகவரி :- **அதிபர்,**
**சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.**

## மாணவர்கள் புதிய அனுமதி

## சிவபூமி பாடசாலை

**(சிறுவர் மனவிருத்திப்பாடசாலை)**
**கோண்டாவில் - யாழ்ப்பாணம்**

2021 ம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வருகை தந்து அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி:
**சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்**
**தொலைபேசி :- 021 222 7938**

## சிவபூமி பாடசாலை

**(சிறுவர் மனவிருத்திப்பாடசாலை)**
**கனகபுரம் - கிளிநொச்சி**

2021 ம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வருகை தந்து அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: **சிவபூமி பாடசாலை, 1ம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி.**


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 12 . 1940 | 08 . 02 . 2021 |

## திருமதி பத்மாதேவி பொன்னம்பலம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பத்மாதேவி பொன்னம்பலம் அவர்கள் February 8th, 2021 அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அவர் 80 வருட காலத்தினை இப்பூவுலகில் இறையருளால் அவரின் குடும்பத்தினருடனும் அவர்தம் நண்பர்களுடனும் சந்தோசமான வாழ்க்கையினை வாழ்ந்து இப் பூவுலகினை நீத்து இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் மாவிட்டபுரத்தினை சேர்ந்த காலம்சென்ற திரு. பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும். யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கினை சேர்ந்த காலம்சென்ற திரு & திருமதி நாகநாதர் அவர்களது அன்பு புதல்வியும். யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தினை சேர்ந்த காலம் சென்ற திரு & திருமதி. விஸ்வனாதர் அவர்களது அன்புமருமகளும். கேசன் (கனடா). பிரதீபன் (கனடா) அவர்களது அன்புத் தாயாரும். காலம்சென்றவர்களான சிறீபுஸ்பானந்தன். பாலசுப்பிரமணியம். தர்மாவதி. புனிதவதி. விஜயானந்தன் மற்றும் சிவனாதன் (கனடா). கௌசலாதேவி (கனடா). சத்தியானந்தன் (அவுஸ்திரேலியா). காலம்சென்ற சத்தியதேவி அவர்களது அன்பு சகோதரியாரும். தபோதினி (கனடா). மைதிலி (கனடா) ஆகியோரது அன்பு மாமியாரும். உதேவ். அஸ்வின். ஹரிணி. அமிர்தா. கிறிஸ்ணி ஆகியோரது அன்பு பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய ஒன்ராறியோ அரசின் கொரோனா தாக்கத்தினை குறைக்கும் விதிகளுக்கமைவாக குடும்ப உறவுகளினால் மட்டும் February 11. 2021 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று கனேடிய Toronto நேரம் முற்பகல் 10.30 இல் இருந்து 12:30 வரை செய்யப்பட்டு. 384 Findley Avenue, Ajax, Ontario இல் அமைந்துள்ள Ajax Crematorium & Visitation center இல் தகனம் செய்யப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Keshan (416) 725-2733
Pratheeb (416) 471-9164

**தகவல்:**
**பொன்னுத்துரை**
**அன்னபூரிபூரணம்**
**குடும்பத்தினர்.**



**அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு**

## ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

ARIYALAI NEERNOCHCHITHALVU
SRI SITHIVINAYAKAR TEMPLE

| Ariyalai, Jaffna, Sri Lanka. | T.P: 021 221 5461<br>ப.இல:HA/5/JA/218 | அரியாலை, யாழ்ப்பாணம், இலங்கை. |
|---|---|---|
| சு.கனகலிங்கம்<br>தலைவர் | மோ.நந்தினி<br>பொருளாளர் | கு.ரகுகாந்தன்<br>செயலாளர் |

## அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் அறிவித்தல்

இத்தால் சகலருமறிய யாழ் மாநகர சபையின் கண்டி வீதி. 9 ம் வட்டாரத்தில் (அரியாலை கிழக்கு) அமைந்துள்ள 552/15ம் இலக்க வரி மதிப்பீட்டு காணி அரியாலை நீர்நொச்சித்தாழ்வு. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமானது என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்படி ஆலயத்தின் நிர்வாகசபை தலைவர் சுப்பையா கனகலிங்கம். செயலாளர் குணரத்தினம் ரகுகாந்தன் செயல்பாட்டாளர் அப்பாத்துரை - உபயசேகரம் ஆகிய நாங்கள் தனித்தோ கூட்டாகவோ அக் காணி வீட்டில் திருமதி வசந்தி - தியாகலிங்கம் வாழ்வதற்கு எந்தவிதமான ஆவணங்களிலும் கையெழுத்திட்டு வழங்கவுமில்லை எந்த வாய் மொழி மூலம் அனுமதி வழங்கவுமில்லை என்பதை இத்தால் வெளிப் படுத்துகின்றோம்.

| சு.கனகலிங்கம் | கு.ரகுகாந்தன் | அ.உபயசேகரம் |
|---|---|---|
| கௌரவதலைவர் | கௌரவ செயலாளர் | செயல்பாட்டாளர் |
| | 2021.02.10 | நிர்வாகசபை உறுப்பினர். |

## மரண அறிவித்தல்



## திருமதி இராசம்மா இரத்தினம்

பளை மாசாரை பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணம் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா இரத்தினம் நேற்று (10.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற இரத்தினத்தின் பாசமிகு மனைவியும். காலஞ் சென்றவர்களான மாணிக்கம். சோமசுந்தரம். சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும். இராசேந்திரம். அருணகிரி. கமலநாயகி. காலஞ்சென்ற-வர்களான இராசையா. மங்கையற்கரசி. மகேஸ்வரி. செல்லம்மா. பூபதி. பொன்னையா ஆகியோரின் அன்பு மைத்துனியும். ஸ்ரீதரன் (France). ஸ்ரீமோகன் (Germany). ஸ்ரீகரன் (Germany). ஸ்ரீதாசன் (Norway). ஜெயறோகினி. காலஞ்சென்ற ஜெயவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும். கமலகுமாரி. நிர்மலாதேவி. வனஜா. கிறிஸ்ரீனா. செல்வரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும். நிரோசன். நிசாந்தன். அபிராமிநிதா. வினுஜா. பிரதீஸ். சுஸ்நிதா. ஷலோற்த்தா. ஜனகன். பிரவீணா. வரவீணா. காலஞ்சென்ற நிதர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.38, 1ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 990 5518**

## சிவபூமி நாய்கள் சரணாலயம் -இயக்கச்சி-

## பணியாளர் தேவை

எமது சிவபூமி சரணாலயத்தில் நாய்களை பிரியத்துடன் பராமரிப்பதற்கு பணியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதியுண்டு. (குடும்பமாக தங்கியிருப்பது விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :-
தலைமை அலுவலகம்,
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.
**021 222 7938**


## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**மல்லிகாதேவி (மல்லி) மகேந்திரராஜா**

தோற்றம்
24.11.1927

மறைவு
04.02.2019



திதி:- அமாவாசை (11.02.2021)

நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறைவனிடமும் கலந்திருக்கும்
உங்களின் ஆத்மா சாந்தியடைய
மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
மேதேஸ் ஒழுங்கை, மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி கிறிஸ்ரபெல் அனோஜா அன்ரன்**
(எவ்.எக்ஸ் அன்ரன் - நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் அன்பு மனைவி)

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை

## ஓராண்டு நினைவஞ்சலி

உதிப்பு
10 . 11 . 1948

உதிர்வு
11 . 02 . 2020



**அமரர் கந்தையா சிதம்பரநாதன்**

வாழ்நாளில் தினமும் கூடையில்
பூவெடுத்து கோவில்களில் வாசகம் படித்து
இறைவனடி சேர்ந்த ஓராண்டில்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்

மீசாலை மேற்கு,
மீசாலை.

அன்பு மனைவி
வசந்தா


### யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் நடத்தப்படவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| இல | பயிற்சி விபரம் | பயிற்சிக் காலம் | அடிப்படைக் கல்வித்தகைமை |
|---|---|---|---|
| 01 | கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவு | 04 மாதம் | எட்டாம் வகுப்பு சித்தி |
| 02 | கணினிப் பயிற்சிநெறி-MS Office | 03 மாதம் | க.பொ.த. சாதாரண தரம் |

மேற்படி பயிற்சிக்கான விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் சபையின் அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி - 25.02.2021

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி- செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,
இல 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
19 . 03 . 1985

கண்நெகிழ
11 . 02 . 2007



**செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்**
(மாணவன்-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, S.S.M.பொறியியல் கல்லூரி-சேலம்-இந்தியா)

கல்விதனில் நீர் வளர்ந்து கனிவுடனே தான் நிமிர்ந்து
வித்தகனாயெம் முன் விரைந்து வருவீரென
வண்ணக் கனவுகளை வகை வகையாய் விதைத்துவிட்டு
எண்ணிய கருமமெல்லாம் எளிதில் நிகழுமெனத்
திண்ணிய நெஞ்சுடனே தினமும் நாம் காத்திருக்க
கண்ணிமைக்கும் நேரமதில் கலந்துவிட்டீர் கடவுளிடம்
காலக் கடிகாரம் கடிதெனச் சுழன்றாலும்
ஞாலமதில் உம் நினைவுகள் நீண்டிருக்கும் எம்முடனே!!

சாந்தி சாந்தி சாந்தி

5- 4/3, 42 வது லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
077 957 9793

குடும்பத்தினர்.
புனித வாசம்,
மீசாலை கிழக்கு, மீசாலை.

## மரண அறிவித்தல்

பிறப்பு
25 . 06 . 1940

இறப்பு
09 . 02 . 2021



**தம்பு சுந்தரலிங்கம்**

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பு சுந்தரலிங்கம் அவர்கள் (09.02.2021) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், பிரதீபன், பிரகலாதன், கீதர்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், அரவிந்த், சினேகா, அஜய், பிரியங்கா, திவ்யா, ஸ்வதி ஜெய், ஈதில்சரண் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் சுவிஸ்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
தனபாலசிங்கம் குடும்பம்
மீசாலை.

## ஜெனிவாவிலிருந்து தப்பவே ஜனாஸா அடக்கத்துக்கு அனுமதி

### மனித உரிமைச் செயற்பாட்டாளர்

கொழும்பு, பெப். 11

ஜெனிவா நடைமுறைகளில் இருந்து தப்பிப்பிழைப்பதற்காக சீனா மற்றும் பாகிஸ்தான் துணையுடன் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் காய்நகர்த்தல்களின் ஒரு பகுதியாகவே கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதிப்பதாக விடுத்துள்ள அறிவிப்பைக் கருத வேண்டுமே தவிர முஸ்லிம்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்ட விடயமாக நோக்கமுடியாது என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஷீரின் ஷரூர் தெரிவிக்கின்றார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார். இந்தநிலையில், ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் மனுக்களை கடந்தாண்டு ஏப்ரல் மாதத்திலேயே தாக்கல் செய்து முன்னின்று செயற்பட்டவர் ஷீரின் ஷரூர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது முஸ்லிம் சமூகத்துக்கு உரிமைகளை வழங்கவேண்டும் என்பதற்காக வழங்கப்படவில்லை. உண்மையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜெனிவா நடைமுறைகளில் அடுத்துவரும் இரண்டுவாரங்களும் அரசுக்கு மிகவும் கடுமையானதாக இருக்கப்போகின்றது. ராஜபக்ச அரசு ஜெனிவா தீர்மானத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு சீனா மற்றும் பாகிஸ்தான் துணையுடன் வழிதேடிக்கொண்டிருக்கின்றது. ஒரு தீர்மான வரைவை தயாரித்து சீனாவின் உதவியுடன் ஜெனிவாவில் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் அனைத்திலிருந்தும் விடுபட்டு வெளியே வருவதற்கும் தற்போது இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் செயற்படும் பிரதான குழு தயாரித்துக்கொண்டிருக்கின்ற தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகள் குறிப்பாக ஓ.ஐ.சி. எனப்படும் இஸ்லாமிய கூட்டுறவு நாடுகளின் உதவியைத் தேடிக்கொள்வதற்குமாகத்தான் இதனைத் திட்டமிட்டிருக்கின்றனர். நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி தருவதாகக் கூறினாலும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை எரிக்கவேண்டும் என்று கடந்த ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அதிவிசேட வர்த்தமானியை மாற்றி அமைக்காமல் முஸ்லிம்களுக்கு நல்லடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

பிரதமரின் அறிவிப்பு முஸ்லிம்களுக்கு தற்காலிகமாகக் கிடைத்த ஓர் ஆறுதலாகவே பார்க்கின்றேன். தவிர நீண்ட காலத்தில் ராஜபக்ச அரசு சிறுபான்மை மக்களுக்குச் செய்த அநியாயங்களிலிருந்து ஜெனிவாவிலிருந்து தப்பிச் செல்லுமாயின் இது சிறுபான்மை மக்களுக்கு நீண்டகாலத்தில் சாவமணி அடிக்கும் ஒரு செயற்பாடாக அமையும்.

ராஜபக்ச அரசு பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிராகவும் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அநியாயங்கள், பாரபட்சங்கள், மனித உரிமை மீறல்கள் எல்லாம் இதனால் மாறப்போவதில்லை.

ஒரு விதத்தில் அரசைக் கேள்வி கேட்கக்கூடிய ஒரே தகைமையில் இருப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையாகும். அதிலிருந்து இலங்கை அரசு தப்பிப் பிழைத்தால் இலங்கை மியான்மர் போன்று முன்நகர்ந்து இராணுவமயப்படுத்தப்பட்டு சர்வாதிகார நாடாக மாறும். அதில் ஒருபகுதியாகவே நான் இதனைப் பார்க்கின்றேன். - என்று தெரிவித்தார். (கு-இ)

**சிறுநீரகம் தேவை**

B,O குருதி வகையை சேர்ந்த
சிறுநீரகம் தேவை.
தொடர்பு:076 239 9874

**வீடு வாடகைக்கு**

யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையிலுள்ள ஓடை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் சிறிய வீடு சிறிய குடும்பத்திற்கு (2 அல்லது 3 பேர்) வாடகைக்குண்டு.
தொடர்பு :- 077 244 5706

# போராட்டத்தையடுத்து தூபிக்கு முட்கம்பி வரியல்

வவுனியா, பெப். 11

வவுனியா நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபிக்குள் எவரும் பிரவேசிக்கக்கூடாது என்று தெரிவித்து முட்கம்பியால் வரியலிடப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் ஊழியர்கள் சிலர் சில நாள்களாக நகரசபை நிர்வாகத்துக்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா நகரசபையின் பொது நூலகத்தில் பணியாற்றிவந்த புதிய அரச பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் க.கோல்டன் மற்றும் ஏனைய சில ஊழியர்களே, நகரசபை நிர்வாகம் தமக்கு அநீதி இழைத்துள்ளது என்று குற்றஞ்சாட்டி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள முரண்பாடு, உள்ளக ஆளணி மற்றும் நிரந்தர நியமனம் என்பனவற்றைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்திருந்தேன். இதனால் என்னைப் பழிவாங்கும் நோக்கில் தனக்கு நகரசபை நிர்வாகம் அநீதி இழைத்துள்ளது என்று அரச பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது பணியை இடைநிறுத்தி தன்னை நகரசபை பூங்காவில் சுத்திகரிப்பு பணியில் நகரசபை நிர்வாகம் அமர்த்தியுள்ளது. இதனால் தனது பணியின் முன் அனுபவ காலம் பாதிக்கப்பட்டுள்ளது.

நகரசபை நிர்வாகம் தன்னைப் பழிவாங்குவதை நிறுத்தி தனக்கு மீண்டும் நூலகத்தில் பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அனைத்து ஊழியர்களினுடைய சம்பள முரண்பாடு, உள்ளக ஆளணி வெற்றிடம், நிரந்தர நியமனம் போன்ற கோரிக்கைகளையும் தீர்த்துவைக்க வேண்டும். - என்று கோருகின்றார்.

இந்த நிலையிலேயே போராட்டம் இடம்பெற்றுவரும் பொங்குதமிழ் தூபியைச் சுற்றி நகரசபை நிர்வாகம் முட்கம்பி வரியலிட்டுள்ளது.

அதற்குள் அனுமதியின்றி யாரும் பிரவேசிக்கக் கூடாது என்றும் அறிவித்தல் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

(த-110)

## மரண அறிவித்தல்



### அரியரட்டினம் வைகுந்தநாதன் JP

(ஓய்வுபெற்ற வருமானவரி பரிசோதகரும், சமாதான நீதவானும்)

துன்னாலை வடக்கு சோலியவத்தையை பிறப்பிடமாகவும், துன்னாலை வடக்கு வல்லியானந்தத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரியரட்டினம் வைகுந்தநாதன் JP (ஓய்வுபெற்ற வருமானவரி பரிசோதகரும், சமாதான நீதவானும்) நேற்று (10.02.2021) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரட்டினம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற சுசீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களாகிய மதியாபரணம், மைசூர்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயக்குமார் (கோண்டாவில்) இன் மைத்துனரும், நீதிராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பிரபு ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீதிராசா ரேணுகாவின் பாசமிகு மாமனாரும், ஜஸ்நிகா, அவிஸ்நிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக தியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மகன்: வைகுந்தநாதன் நீதிராசா (பிரான்ஸ்)
0033751012109
மருமகன்: வ.பிரபாகரன் (செட்டிகுளம், வவுனியா)
077 864 6433

வல்லியானந்தம்
துன்னாலை வடக்கு,
கரவெட்டி

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 04 . 1932



இறப்பு 10 . 02 . 2021

### காசிப்பிள்ளை இரத்தினம்மா

யாழ் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இரத்தினம்மா அவர்கள் நேற்று (10.02.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற காசிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சிவபாதசுந்தரம், சிவநாதன், கமலாதேவி, மங்கையற்கரசி, இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகேந்திரராஜா, யோகநாதன், மகாலட்சுமி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், உமாதேவி, சுந்தரகாந்தா, மனோன்மணி, அனுசியா, கனகராசா, தியாகராசா, பத்மகுமார், இராஜேந்திரன், காலஞ்சென்ற சண்முகராசா ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 071 4422183
நாகபூசணி அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

தோற்றம் . 10 . 06 . 1934



மறைவு . 10 . 02 . 2021

### கந்தையா சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர்)

வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவப்பிரகாசம் நேற்று (10.02.2021) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வே.நா.கணபதிப்பிள்ளை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்தானலட்சுமி (ஓய்வுபெற்ற உதவி அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், உதயணன் (திருகோணமலை), Dr.சத்யரேகா (தோல் வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம்), நித்தியகலா (கொழும்பு), Dr.விஜயாலயன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் தந்தையும், கம்சௌரி, சூரியகுமாரன், பிரபாகரன், பிரஷாந்தினி ஆகியோரின் மாமனாரும், தவமணிதேவி, சரஸ்வதி (நெதர்லாந்து), நடராசா, இரத்தினவடிவேல் ஆகியோரின் சகோதரனும், கந்தசாமி, சிவச்செல்வம், கமலாதேவி, மங்களேஸ்வரி, சிறீவேல்நாதன், வசந்தகோகிலம் ஆகியோரின் மைத்துனரும், நிஷாந்தி, சுதர்ஷன், வினோத், கணேசபிரியா, வந்தனா, ஆதித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.02.2021) பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இலக்கம் 60, அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் இருந்து கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 7315832

தகவல்:
குடும்பத்தினர்.

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் ஏலவிற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன

காலம் : 18.02.2021 வியாழக் கிழமை காலை 10.00 மணி
இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

**பொருட்கள் விபரம்**

இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், வாகன ரயர்கள்

**நிபந்தனைகள்**

01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்
02. சித்தியடைந்த ஏலத்தார் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 0212240017

க.தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**'பொ-பொ...**


தொடர்பான தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
கடும்போக்கான இராணுவ மயப்பட்ட ஆட்சி நிகழும் போதும் மக்களின் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியின் எழுச்சி புலம்பெயர் தேச மக்களுக்கு உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் என்ற பெயரில் ஒரு மக்கள் இயக்கத்தை இங்கு அங்குரார்ப்பணம் செய்கிறோம். மக்கள் பேரியக்கம் தொடர்ந்து போராட்டங்களை செய்யும். நிலத்திலும் புலத்திலும் எமது உரிமைகளை வென்றெடுப்போம். கடந்த 12 வருடங்களில் பல நிகழ்வுகளை நாம் ஒழுங்கமைத்திருந்தாலும் இது போன்ற கூட்டிணைவு இதுதான் முதல்முறை - என்றார். (ம-20)

**பொலிஸ்....**

லன் என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பான மேலதிக விசா ரணை களை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9,159)

**வடக்கில்....**

வமனை ஆகியவற்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளில் 21 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.
இரு இடங்களிலுமாகச் சேர்த்து 796 பேரின் மாதிரிகள் நேற்றுச் சோதிக்கப்பட்டன. இதில் யாழ் மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 11 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 8 பேர் கரைச்சி ஆடைத்தொழிற்சாலையுடன் தொடர்புடையவர்கள், இருவர் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவிகள், ஒருவர் கொழும்பு சென்றுவந்த நபர்,
இதேவேளை யாழ் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் மன்னார் நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 5 வங்கி ஊழியர்கள், 3 பேர் மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இருவர் மன்னார் நகரப் பகுதியை சேர்ந்தவர்கள். இதையடுத்துக் குறித்த வங்கிக்கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது டன் இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-26,319)


கூந்தூர் முருகன் கும்பகோணம் | குருந்தூர் முல்லைத்தீவு

## குருந்தூரைப் போலவே கூந்தூரில் சிவலிங்கம்!

யாழ்ப்பாணம், பெப். 11
குருந்தூர் மலையில் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்ட தொல்லியல் பொருள் போன்று தமிழகத்தில் உள்ள முருகன் கோவிலில் உள்ள சிவலிங்கம் காணப்படுகின்றது என்ற தகவல் சமூக வெளியெங்கும் உலாவருகின்றது.
மேற்படி தொல்லியல் சிவலிங்கம் என்று சில தொல்லியல் நிபுணர்களும், விகாரையின் எச்சம் என்று தொல்லியல் திணைக்களமும் கூறியுள்ள நிலையில், அதேபோன்ற வடிவமுள்ள சிவலிங்கம் தமிழகம் கூந்தூர் முருகன் கோவிலில் வழிபாட்டில் தற்போதும் உள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
கூந்தூர், குருந்தூர் என பெயரில் கூட ஒற்றுமை தென்படுவதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

# இலங்கையில் நேற்றும் 955 பேருக்குத் தொற்று

### 72 ஆயிரத்தைத் தாண்டியது மொத்தப் பாதிப்பு

கொழும்பு, பெப். 11
இலங்கையில் நேற்றும் 955 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 72 ஆயிரத்து 166ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் ஒரே நாளில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்நிலையில், அதற்கு அடுத்தபடியாக நேற்று தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த வாரங்களில் 800 முதல் 850 வரையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் பின்னர் அந்த எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது. இந்நிலையில், மீண்டும் நாளாந்த தொற்றாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (ம-22)

**IELTS / PTE ENGLISH**
**"ONE DAY WORKSHOP"**
From BIET Colombo
On Saturday 13th of Feb 2021 @ 10.00 am
**Workshop features**
- Introduction to IELTS
- Interaction with IELTS Experts
- An overview of the IELTS Exam
- Special tips and strategies
- Individual discussion

FREE of CHARGE
Register now
077 111 4496
071 244 7552
077 706 6000
Vanue:- British College of Language Learning No.21, Palaly Rd, Jaffna.

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 01 . 1950 — மறைவு 10 . 02 . 2021

### சிவலிங்கம் சிவனேஸ்வரி (சிவம்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மேற்கு அம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவனேஸ்வரி (சிவம்) காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை லச்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னுத்துரை சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவாஜினி (ரேகா- உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்), கஜாந்தி, கிரிஷாந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகரஞ்சன், சசிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, சரஸ்வதி, யோகேஸ்வரி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற சிவராசா, ராஜேஸ்வரி, ஜெகராசா (சுவிஸ்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் (மூத்தாம்பி), பரமராசா, சின்ராசா, சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சருஜன், கவீசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 09 . 1959 — மறைவு 08 . 02 . 2021

### தங்கராசா சந்திரா

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், சிவகுருநாதர் வீதி, சுவிஸ் Zurich ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சந்திரா அவர்கள் கடந்த (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தேவசேனா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும், அஜந்தன், சகிலா, சுகிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்சினி , தயாகரன், பிரசாந் ஆகியோரின் அன்பு மாமியாரும், சனோஜன், ஆரணி, பிரஸ்தோன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) சுவிஸில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 16, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
077 131 3254

தகவல்
குடும்பத்தினர்.

## குருந்தூரில்...

குறித்த பகுதியில் தொல்பொருள் ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சிவ லிங்கத்தை ஒத்த தொல்பொருள் ஒன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டது. இதையடுத்து சிவலிங்க மொன்று மீட்கப்பட்டுள்ளது என்று சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பகிரப்பட்டன. குறித்த தொல்பொருள் பல்லவர்கால எட்டுப் படை தாரா லிங்கம் என்று வரலாற்று ஆய்வாளர் என்.கே.எஸ்.திருச்செல்வமும் உறுதிப்படுத்தியிருந்தார். இந்த நிலையில் அது சிவலிங்கம் இல்லை. ஆதிகால விகாரையின் உடைந்த பாகம் ஒன்றே என்று தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு வகை கல்லால் இந்தத் தொல்பொருள் செதுக்கப்பட்டுள்ளதுடன், அதன் உயரம் சுமார் 6.70 மீற்றர் என கருதப்படுகின்றது. குறித்த கல்லின் மேற்பரப்பு 3 மீற்றர் வரை வெளியில் தென்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த கல்லின் ஒரு பகுதி, நிலத்துக்குள் காணப்படுகின்றமையால், அதன் சரியான உயரத்தைக் கணிப்பிட முடியாது என அதிகாரிகள் கூறுகின்றனர். அதே போன்று, இரண்டு அடி உயரமான மற்றுமொரு கல்லொன்றும் காணப்படுவதாகவும், அது நிலத்துக்குக் கீழ் காணப்படுவதாகவும் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

முல்லைத்தீவு குருந்தூர்மலை பகுதியிலுள்ள தொல்பொருள்களை அகழ்வாராய்ச்சி செய்யும் நடவடிக்கைகள் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் அநுர மனதுங்கவின் ஆலோசனைக்கு அமைய, வவுனியா தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். பி. ஜயதிலக்கவின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

## குருந்தூர்...

நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'குருந்தூர் மலைப்பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு மத்தியில் தொல்லியல் ஆய்வுகளை இராஜாங்க அமைச்சர் ஆரம்பித்துவைத்துச் சென்றார். தற்போது அங்கு அகழ்வாராய்ச்சி நடைபெறுகின்றது. இன்று பல்லவர் கால சிவ லிங்கமொன்று மீட்கப்பட்டுள்ளது.

தொல்லியல் திணைக்களம் நேர்மையுடன் செயற்படும் பட்சத்தில் இங்கு மட்டுமல்ல அநுராதபுரம், பொலநறுவை மற்றும் காலி ஆகிய பகுதிகளில்கூட தமிழ் இந்துக்களின் அடையாளங்கள் தான் அகழ்வாய்வின்போது வெளிவரும் என்பதனைக் கூறிவைக்க விரும்புகின்றேன். அதேவேளை, தமிழ் மக்களை அச்சுறுத்தி, அடக்கி ஆளலாம் என நினைக்கக்கூடாது.

எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றோம். அதற்காகவே போராடுகின்றோம். எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை, நீதி கிடைக்கவில்லை. எமது பிரச்சினைகளை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டுவருவதற்காகவே போராட்டம் நடத்தப்பட்டது. மனித உரிமைகள் பேரவையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதும் எமது நோக்கம்' - என்றார். (ம-44)

## ஜனாஸாக்களை...

தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கா, 'தண்ணீரில் கொரோனா வைரஸ் பரவாது என்பது ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த அவையில் நேற்று (நேற்று முன்தினம்) இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். அப்படியானால் கொரோனாவால் இறப்போரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யலாம்தானே?' என்றார்.

இதற்குப் பதில் வழங்கிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, 'கொரோனாவால் உயிரிழப்போரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப்படும்' என்றார்.

எதிர்வரும் 22ஆம் திகதி இஸ்லாமிய நாடான பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான்கான் இலங்கைக்கு வருகைதந்து இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்றார். இந்த நிலையில் ஜனாஸாக்களை அடக்கம்செய்ய தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்தியா....

டிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் விமான பயணத்தின்போது 'எயார் பபிள்' என்று அழைக்கப்படும் நடவடிக்கையின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான விமானப் போக்குவரத்துக்கள் இயங்கும். இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் இது தொடர்பான திட்டங்களை வெளியுறவு மற்றும் சுற்றுலா அமைச்சகங்களுக்கு சமர்ப்பித்துள்ளது. இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் சுகாதார விதிமுறைகளின்படி இந்த திட்டத்தை நடத்துவதில் இரு நாடுகளும் கவனம் செலுத்தியுள்ளன - என்றார். (ம)

## உடுவில்...

சென்றுள்ளது. இது குறித்து பொலிஸாரிடம் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

உடுவில் மல்வம் 3 ஆம் குறுக்கு வீதியில் உள்ள வீடொன்றிலேயே இந்த அடாவடித்தனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த வீட்டில் உள்ளவர்கள் சத்தமெழுப்பியதும் அங்கு உதவிக்கு வந்த அயல் வீட்டுக்காரர்களையும் வாளைக் காட்டி அந்தக் குழு அச்சுறுத்தியுள்ளது. சேதங்களை ஏற்படுத்திவிட்டு தப்பிச் செல்லும் வழியில் குறுக்கே வந்த முச்சக்கர வண்டியின் சாரதியையும் தாக்கிவிட்டு முச்சக்கர வண்டியின் கண்ணாடிகளையும் சேதமாக்கிவிட்டு அந்தக் குழு சென்றுள்ளது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு உடனடியாக அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ம-10)

## சரத் வீரசேகரவுக்கு...

நீதித்துறைக்கு களங்கம் ஏற்படுத்துகின்ற விடயமாகும். அந்தக் களங்கத்தை ஏற்படுத்தியமைக்காக சரத் வீரசேகரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கோருகின்றோம் இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்தார்.

'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' பேரணியில் கலந்து கொண்ட அனைவரினதும் படங்கள் உள்ளன. வாகன இலக்கங்களைக் குறித்து வைத்துள்ளோம். அனைவரையும் சிறையிலடைப்போம். வாகனங்களைப் பறிமுதல் செய்வோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கேட்டபோதே சுகாஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழ் மக்களின் ஜனநாயக அஹிம்சை வழியிலான பேரணியைக் கொச்சைப்படுத்துகின்ற வகையில் அமைச்சர் சரத் வீரசேகர கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் தன்னெழுச்சியுடன், முஸ்லிம் மக்களின் பேராதரவுடன் நடத்தப்பட்டது இந்தப் பேரணி. இதன் ஊடாகச் சொல்லப்படுகின்ற கருத்துக்களை அறிவதற்கு இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் இதனைப் பயன்படுத்தியிருக்கவேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு. ஆனால் அதன் தாற்பரியத்தை அறியாது தனது கடந்த காலத்தை வெளிப்படுத்தும் வகையில் சரத் வீரசேகர வெளியிட்ட கருத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். சரத் வீரசேகரவின் அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் நாம் அடிபணிய மாட்டோம்.

சரத் வீரசேகர தெரிவித்த கருத்தால் நீதித்துறையின் சுதந்திரம் சுயாதீனம் மீண்டும் ஒருமுறை கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. நீதித்துறையை கொச்சைப்படுத்துகின்ற வகையில் அதன் சுதந்திரத்தை கொச்சைப்படுத்துகின்ற வகையில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள், அவர்களின் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று கூறுவதற்கு சரத் வீரசேகர நீதிபதியா? அல்லது உயர் நீதிமன்ற நீதியரசரா? அல்லது பிரதம நீதியரசரா? நீதித்துறை எடுக்க வேண்டிய விடயத்தை இவர் எவ்வாறு தீர்மானிக்க முடியும்? இது நீதித்துறையை அவமதிக்கும் கருத்து. ஆகவே சரத் வீரசேகரவுக்கு எதிராக நீதிமன்றத்தை அவமதித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இதேவேளை பொலிகண்டி முடிவல்ல என்பதை அவருக்குச் சொல்வதுடன் பேரணியில் பங்கேற்ற இலட்சக்கணக்கானவர்களை அடைத்து வைப்பதற்கு இலங்கையில் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை போதாது. அப்படியென்றால் வடக்கு கிழக்கு முழுவதையும் திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்ற வேண்டிவரும் என்றார். (ம-ஒ.5)

## தேசிய....

கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தேசிய சக்திகள் இணைந்துதான் இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவந்தன. எனவே, மக்கள், அரசு மற்றும் தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்காக மேற்படி சக்திகள் தொடர்ந்தும் செயற்படும். எனவே, தேசிய அமைப்புகளுக்குள்ளும் பல பிரச்சினைகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதேபோல் அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் சூழ்ச்சி நடக்கின்றது. எனவே, விழிப்புடன் இருந்து மதிநுட்பத்துடன் அனைவரும் செயற்படவேண்டும். சர்வதேச உளவு அமைப்புகள் நாட்டுக்குள் தீவிரமாகச் செயற்படுகின்றன. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர், தேசிய வளங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே இவை செயற்படுகின்றன.

அதேவேளை, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றாமல், நாட்டுக்காக இணைந்து செயற்பட முன்வர வேண்டும். கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். மஹிந்த ராஜபக்சவை முன்னிலைப்படுத்தி பிரச்சினைகளை உருவாக்குவதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றது. நாட்டு மக்கள் மஹிந்த ராஜபக்சவை நேசிக்கின்றனர். அவருக்கு துளியளவுகூட பிரச்சினை ஏற்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். பிரச்சினைகளை உருவாக்குவதற்கு மஹிந்தவை பயன்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்' என்றார். (ம-44)

## மக்களின்...

பேரணியை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவரான தவத்திரு வேலன் சுவாமிகள்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் அபிலாசையை பெற்றுக் கொள்ள, நீதியைப் பெற்றுக்கொள்ள, அறத்தின் வழி உரிமையை பெற்றுக் கொள்ள அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவை இன்றுள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வு ஆரம்பமாகும் முன்னர் எமது மக்களின் மன உணர்வுகளை கட்சிகளை முன்னிறுத்தாமல் வெளிக்கொண்டுவர வேண்டிய நிலையிலும் நாம் இருந்தோம்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிவயோகநாதன் என்னைத் தொடர்பு கொண்டு இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார். இதன்படி வடக்கு மாகாணத்தில் நானும் கிழக்கு மாகாணத்தில் அவரும் கூட்டங்களை ஒழுங்கு செய்தோம். காலம் குறைவாக இருந்ததால் 50 பேர்கூட பேரணிக்கு வரமாட்டார்கள் என பலர் கூறினார்கள். ஆனால் மக்களின் மனதில் ஏற்பட்ட தன்னெழுச்சி அனைத்தையும் மாற்றியுள்ளது. அதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தந்த நம்பிக்கையும்தான் போராட்டம் வெற்றிபெற முக்கிய காரணம். பேரணியில் இஸ்லாமிய சகோதரர்கள் வழங்கிய ஆதரவும் முக்கியமானது. இஸ்லாமிய - தமிழ் உறவை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய காலம் இது. அதற்கேற்ப அனைத்து வாய்ப்புக்களும் நிலைமைகளும் கூடிவந்துள்ளன - என்றார். (ம-20)

## கொரோனா...

கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 3 ஆண்களும், 2 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, கொழும்பு 5ஐச் சேர்ந்த 73 வயதுடைய பெண் ஒருவரும், வத்தளைப் பிரதேசத்தை சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவரும், அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும், கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும் மற்றும் வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 61 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (ம-22)

# உருமாற்றமடைந்த கொரோனா 86 நாடுகளுக்குப் பரவியுள்ளது!

**லண்டன், பெப். 11**

**பிரிட்டனில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்ட உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ், 86 நாடுகளுக்குப் பரவியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**



கொரோனாவுக்கு எதிராகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசி உருமாற்றமடைந்த கொரோனாவுக்கு எதிராகவும் செயற்படுமா என்பது இன்னமும் முறைப்படி எண்பிக்கப்படாத நிலையில் இந்த அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு வெ ரியிட்ட அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள் ாதாவது: 'கடந்த ஆண்டு செப்ரெம்பர் ாதம் 20ஆம் திகதி பிரிட்டனில் க டறியப்பட்ட புதியவகை கொரோனா ை ஸ் தற்போது 86 நாடுகளில் கண்ட ப்பட்டுள்ளது. மேலும் பிரேசில், தெ னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட உ மாற்றம் அடைந்த கொரோனா வைரஸ்களும் வேகமாக பரவும் தன்மை கொண்டதாகவே உள்ளன. தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய வகை கொரோனா வைரஸ் 44 நாடுகளிலும், பிரேசிலில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் 15 நாடுகளிலும் கண்டறியப்பட்டுள்ளது' என்றுள்ளது. இந்த நிலையில் கொரோனா வைரஸின் உருமாற்றம் அச்சம் தரவில்லை என்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் அச்சம் தருவதாக உள்ளன என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் பரவத் தொடங்கிய உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் ஜேர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் தற்போது அதிதீவிரமாகப் பரவி வருகிறது.

கொரோனா வைரஸ் சீன ஆய்வகத்தில் திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்பட்டது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்தது. இதையடுத்து உலக சுகாதார அமைப்பின் குழுவொன்று அண்மையில் சீனாவின் வுகானில் (வுகான் மாகாணம்தான் கொரோனாவின் பிறப்பிடம் என்று கருதப்படுகின்றது) ஆய்வுகளை நடத்தியது. இந்த ஆய்வின் முடிவுகள் அண்மையில் உலக சுகாதார அமைப்பால் அறிவிக்கப்பட்டன.

இதன்படி கொரோனா வைரஸ் ஆய்வகங்களில் உருவாக்கப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பு வெளிவந்த மூன்று தினங்களில் புதிய வைரஸின் பரவல் தொடர்பில் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது உலக சுகாதார நிறுவனம். (ம)


**வேலை ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் சரவணபவன் பான்சி கவுஸ் மொத்த, சில்லறை விற்பனை நிலையத்திற்கு ஆண்கள் தேவை.


**தொலைபேசி இல: 077 468 3354**

**இல.26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.**


## நியூசிலாந்து, இந்தோனேசியாவில் நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை!

வெ ங்டன், பெப். 11

நிய லாந்து மற்றும் இந்தோனேசியாவி நேற்றுச் சக்திவாய்ந்த நில நடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இதனால் சுனாமி ஏற்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.



நியூசிலாந்துக்கு வடக்கே ஆஸ்திரேலியாவுக்கும், பிஜிக்கும் இடையே நேற்றுச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலுக்கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 7.7 ரிக்டர் அளவில் பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் குறிப்பிட் டுள்ளது.

அதேபோல் இந்தோனேசியாவிலும் 6.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த இரு அதிர்வுகளாலும் சுனாமி அலை ஏற்படச் சாத்தியம் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)

## பக்ரிஸதே கொலையின் பின்னணியில் இராணுவம்

### ஈரான் தெரிவிப்பு

தெக்ரோன், பெப். 11

'ஈரான் அணுகுண்டின் தந்தை' என்று அறியப்பட்ட ஈரானின் மூத்த அணு வி ஞ்ஞானி மொஹ்சென் பக்ரிஸதே ெ ாலை வழக்கில் இராணுவத்தைச் ் ந்த நபர் ஒருவர் தொடர்புபட்டிருப்ப த க ஈரான் தெரிவித்துள்ளது.

ெ ாஹ்சென் பக்ரிஸதே, ஈரானின் ு ணு ஆயுத ஆராய்ச்சியின் மூளை ய கச் செயல்பட்டு வந்தார். அணுசக் த துறையில் மிகவும் முக்கிய விஞ்ஞா ன யான மொஹ்சென், 'அணுகுண் டி தந்தை' என்றே ஈரான் நாட்டு மக்களால் அழைக்கப்பட்டார். இந்நிலையில், கடந்த நவம்பர் மாதம் ஈரான் தலைநகர் தெக்ரோனின் புறநகர் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரின் இறப்புக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஈரான் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், இந்தக்கொலையின் பின்னணியின் இராணுவத்தைச் சேர்ந்த நபரொருவர் உள்ளார் என்று ஈரான் தற்போது குறிப்பிட்டுள்ளது. எனினும் குறித்த நபர் எந்த நாட்டின் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படவில்லை. (ம)


## மரண அறிவித்தல்

உதிப்பு 26 . 04 . 1964



உதிர்வு 10 . 02 . 2021

**திருமதி தவமலர் (சித்ரா) தர்மசேகரம்**

(பெரியநாவலடி, கொடிகாமம் )

பெரிய நாவலடி, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட. திருமதி தவமலர் தர்மசேகரம் நேற்று (10.02.2021) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குலசிங்கம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகளும், செல்லையா தர்மசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - மெனிக்கா தம்பதியினரின் அன்பு மருமகளும், குலச்சந்திரன் (சந்திரன் - கொடிகாமம் பிரதேச சபை,) தர்மச்சந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற யோகச் சந்திரன் மற்றும் திருமதி விஜயமலர் தவக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவக்குமார் (லண்டன்), அனுசியா, சிவயோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் லகிசா (லண்டன்) வின் பாசமிகு பெரியம்மாவும், அபிசன் ( லண்டன்) டினக்கியா (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை. முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வடக்கு வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரிய நாவலடி,
கொடிகாமம்.

தகவல்:
கு.குலச்சந்திரன் (சந்திரன்)
கொடிகாமம் பிரதேச சபை

077 408 0786, 077 024 3907.




இப் த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.